சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 8	இதழ்: 2	ஜூலை - 2026	விலை - ரூ.20/-
VOL: 8	ISSUE: 2	JULY - 2026	Rs. 20/-



சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் வழங்கும்

"சாய் சங்கமம்"

12.7.2026 ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணியில் இருந்து மதியம் 2 மணிவரை

சாயி பஜன், குத்துவிளக்கு பூஜை, ஜோதி தியானம், பிரார்த்தனை, ஹோமம், அன்னதானம், சத்சங்கம்



இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை.
இம்மாத மாபெரும் ஹோமம்

ஸ்ரீ லட்சுமி குபேர ஹோமம்

(செல்வம் பெருதல், வியாபார வளர்ச்சி, கடன் தொல்லைகள் நீங்குதல், நிலையான செல்வ வளம்,)

ஹோம காணிக்கை: ரூ.500/-
(நபர் ஒருவருக்கு)

குறிப்பு: ஹோமத்தில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். ஹோமப் பொருட்கள் அன்னதானத்திற்கு காணிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் விபரங்களுக்கு :

திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம்
போன்: 63851 29372

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-8 மலர்-2 ஜூலை-2026

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

உன் உணர்வுகள் மதிக்கப்படாத இடத்தில் ஒரு விநாடிகூட இருக்காதே? அதையும் மீறி இருந்தால் உள்ளுக்குள் அழுது கொண்டு வெளியில் நீ சிரிக்கும்படி ஆகிவிடும். அதேபோல் போலி மனிதர்களை நம்பி வாக்குக் கொடுக்காதே! அவர்களாலேயே நீ பொய்யனாக காண்பிக்கப்படுவாய்.

சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபவர்களை ஒருபோதும் நம்பாதே, உன் முடிவிலிருந்து நீயே மாறி விடுவாய். மற்றவர்களின் குறைகளைப் பேசுபவர்களோடு கனவிலும் சேராதே! ஒரு நாள் உன்னைப்பற்றியும் குறை பேசுவார்கள். ஏமாற்றியவர்களோடு திரும்பவும் இணைந்து கொள்ளாதே! நீ மேலும் ஏமாற்றப்படுவாய்.

சரியான முடிவு எடுக்காமல் எந்த செயலிலும் இறங்காதே! உன் வாழ்நாள் முழுதும் நீ துயரப்படுவாய். உனக்கு சரி என்று தோன்றினால் யாருக்காகவும் நீ பின்வாங்காதே! திரும்பத்திரும்ப செய்வது தான் வெற்றிக்கு வழியே தவிர, பாதியில் விட்டு விட்டு ஓடுவது வெற்றிக்கான வழியாகாது என்பதை நினைவில் வை.

யார் மீதோ உள்ள கோபத்தை யார் மீதோ காட்டுவது தான் மனித இயல்பு. அப்படிக் கோபத்தை காட்டியும் உன்னுடன் இருப்பவர்களை ஒருபோதும் விலக்கி விடாதே! எதையும் யாரிடமும், இலவசமாக வாங்க விரும்பாதே! அது சுயமரியாதைக்கு இழுக்கு. உன் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை.

நிதானமாக சிந்தித்து உறுதியோடு செயல்படுவதும், கடுமையாக உழைப்பது என்று இருந்தால் மன நிறைவான வாழ்க்கை அமையும். நானும் உன்னை விட்டு ஒருபோதும் விலகாதிருப்பேன். இது உன் சாய் அப்பாவின் சத்திய வாக்கு.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா



ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் பேரருளால் தொண்ணூற்று ஆறாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 07.06.2026 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு, இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில், மிகச் சிறப்பாக நடைபெற்றது.

காலை 10 மணிக்கு செல்வி. அமிர்தா, செல்வி. அட்சயா ஆகியோர் ஆத்மஞான பாடலை பாட விழா இனிதே துவங்கியது. அதைத்தொடர்ந்து ஆசிரியரும், குருவுமான திரு. ஸ்ரீராம் பாபா அவர்களின் சத்சங்கமும் அதைத் தொடர்ந்து புத்தக வெளியீடும் நடைபெற்றது.

இம்மாத இதழை ஒய்வு பெற்ற சென்னை மாநகர காவல் உதவி ஆய்வாளர் திரு.எம். வெங்கடாசலம் அவர்கள் வெளியிட, நந்தனம் சாயி பக்தர் திரு. ஆர். ஞானசேகரன் அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தனர். விழாவில், "பாராயணப் பகலவன்" திரு. சுந்தர்சாய், திருமதி. ஜெயந்தி, திருமதி. தனம், திருமதி.சாந்தி, திரு. விஜயராகவலு ஆகியோர் தங்களது அனுபவங்களை



பக்தர்களிடையே பகிர்ந்து கொண்டனர். திருமதி. இந்துமதி நன்றியுரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து ஆத்மஞானியர் குழுவினர் குருவிற்கு மரியாதை செய்து குரு காணிக்கை வழங்கினர்.

சாய் தினானாலயா ஆத்ம ஞான பீடத்தின் அன்னதானக் குழுவினர் வந்திருந்த பக்தர்களுக்கு அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர். புத்தக வெளியீட்டு விழா மதியம் 2 மணிக்கு இனிதே நிறைவடைந்தது.



அன்பு ஒன்றே மூடிய கதவுகளை எல்லாம் திறக்கவல்லது. எல்லா தடைகளையும் தகர்த்து எல்லா சுவர்களையும் ஊடுருவிச் செல்லக் கூடியதும் அதுவே. உண்மையான அன்புக்கு நம்முள் ஒரு சிறிதாவது இடமிருந்தால் வெகு அழகான பேச்சைவிட அது எவ்வளவோ நலனை நம்மிடத்தும் பிறரிடத்தும் அளிக்க வல்லது.

நாம் விதைத்ததைத் தான் அறுவடை செய் கிறோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் விதக்கிறாள். ஒருவன் வாய்ச் சொற் களால் விதக்கிறான். இன்னொருவன் செயல்களால் விதைக்கிறான். எல்லா மனிதர்களும் தாங்கள் விதைத்த விதைகளுக்கு ஏற்ப உணவுப் பயிராகவோ அல்லது களைச் செடியாகவோ வளர்கிறார்கள்.



எதைப்பற்றியும் சிந்திக்காமல் விதைத்தவனுக்கு எந்தச் செயல் நிறைவேற்றமும் ஏற்படவில்லை. செயல் நோக்கத்துடன் விதை களைத் தூவிவிட்டு அதைத் தேடி உண்மையாக உழைத்தவனே 'வெற்றி' என்னும் நற்கனிகளைப் பெறுகின்றான்.

பெரும்பாலான மக்கள் வயதான பிறகே தங்களின் வளர்ச்சி யின்மை குறித்து அழுது புலம்பு



கின்றனர். நீங்கள் சில ஆண்டு களுக்கு முன்பு எதை விதைத்தீர் களோ அதைத்தான் தற்போது அறுவடை செய்கிறீர்கள். நல்லவற் றையே எண்ணி அதற்காக உண்மை யில் உழைத்தால் உங்களுக்கு வெற்றி என்னும் அறுவடை மிகச் சிறப்பாக இருக்கும் அல்லவா?

பகவான் சாயிநாதரின் பேரரு ளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 95 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.


இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திரு. கணபதி மேடவாக்கம். ரூ.500.
திருமதி. சிவசங்கரி, சென்னை. ரூ.400.
திரு. ஆறுமுகம், கொளத்தூர். ரூ.200
திருமதி. உமாசங்கரிஅயனாவரம். ரூ.200.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.
திரு. ராமன், திருவாரூர். ரூ.100
திரு. குமார். திருவள்ளூர். ரூ.100.
திரு. மூர்த்தி. கோவை ரூ.100.
திரு. கோபி. திருத்தணி. ரூ.100.
திரு. நாகராஜன். சென்னை ரூ.100.

சாயி சரிதம்

கதை வடிவில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதை பதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.



சென்னையில் இருந்து பஜனைக்குழு ஒன்று தீர்த்த யாத்திரையாக காசிக்குப் புறப்பட்டது. செல்லும் வழியில் சீரடியில் சாயி என்ற சாது இருக்கிறார். அவர் அனைவருக்கு பண உதவி செய்கிறார் என்று கேள்விப்பட்டு சீரடிக்கு வந்து தங்கி பாபாவின் முன்னால் மிகச்சிறந்த பாடல்களை எல்லாம் பாடினர். ஆனால் அவர்கள் உண்மையில் பணத்திற்கு ஆசைப்பட்டே பாடினர்.

அக்குழுவில் மூன்று நபர்கள் மிகவும் பணத்தாசை பிடித்தவர்களாக இருந்தனர். ஆயினும் அக்குழு தலைவரின் மனைவியின் குணம் மாறுபட்டதாக இருந்தது. அவளுக்கு பாபாவைப் பார்த்ததில் இருந்து அவரின் மீது அன்பும், மரியாதையும் இருந்தது. ஒரு நாள் மதியான ஆரத்தியின்போது, அவளது பக்தி, நம்பிக்கை இவற்றில் மகிழ்ந்த பாபா அவளுக்கு அவளது இஷ்ட தெய்வமான இராமனாக காட்சியளித்தார்.

அவளது இஷ்ட தெய்வத்தைக் கண்ட அவள் மிகவும் உருகிப்போய்விட்டாள். அவளது கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் பொங்கிவழிய ஆரம்பித்தது. கைகளைத் தட்டி ஆரவாரம் செய்தாள். மக்கள் அவளது ஆனந்த நிலையைக் கண்டு ஆச்சர்யப்பட்டனர்.



- வே.ஸ்ரீராம்

அன்று மாலை தன் கணவனிடம் எவ்வாறு சாயிபாபாவின் இடத்தில் தன் இஷ்ட தெய்வம் ஸ்ரீராமனைக் கண்டாள் எனவும் விளக்கிக்கூறினாள்.

தன் மனைவி ஒரு எளிமையான பக்தை என்பதால் அவள் கூறுவது வெறும் மனபிராந்தியே என்று அவர் நினைத்தார். மற்றவர்கள் எல்லாம் சாயி பாபாவைப் பார்க்கும்போது நீ மட்டும் எப்படி இராமனை கண்டாய் என்று அவளை கேலி செய்தார்.

இம்மாதியாக நடந்து கொண்டிருந்தபோது ஒரு நாள் இரவு அவளது கணவர் தன் கனவில் அற்புதக் காட்சி ஒன்றைக் கண்டார்.

அவர் ஏதோ ஒரு நகரத்தில் போலீஸ் லாக் அப்பில் இருக்கிறார். ஒரு போலீஸ்காரர் அவரை நன்றாக பிரம்பால் அடிக்கிறார். அப்போது போலீஸ் ஸ்டேசன் வாசலில் பாபா அமைதியாக நின்று கொண்டு வேடிக்கை பார்ப்பதையும் பார்க்கிறார். பாபாவைப் பார்த்ததும் இவர் சத்தமான குரலில் உன் புகழைக் கேள்விப்பட்டு உன் திருவடிகளில் பணியவே இங்கு வந்தேன். நீ என் எதிரில் இருக்கும் போதா எனக்கு இப்படி நடக்க வேண்டும் என்று கேட்கிறார்.

அதற்கு பாபா, உனது கர்மாவின் விளைவை நீ அனுபவித்துத்தான்

தீர வேண்டும் என்கிறார். இந்தப்பிறவியில் இந்தத்துன்பத்தை அனுபவிக்கும் வகையில் நான் ஏதும் செய்யவில்லையே என்கிறார் அவர். இப்பிறவியில் இல்லை என்றால், போன பிறவியில் செய்திருப்பாய் என்றார் பாபா.

எனது முந்தைய பிறவி பற்றி எனக்கு ஏதும் தெரியாது. ஆனால் அப்படியே நான் செய்திருப்பதாக வைத்துக் கொண்டாலும் உங்களின் பேராற்றலின் முன் நெருப்பில் வைக்கோல் எரிந்து அழிவத்தைப் போன்று எனது கர்மவினை அழிந்துபோகக் கூடாதா என்றார் இவர். உடனே பாபா என்னைப் பற்றி உனக்கு அத்தகைய நம்பிக்கை இருக்கின்றதா என்றார். இவரும் ஆமாம் என்ற உடனே பாபா, அப்படியானால் உனது கண்களை மூடு என்றார்.


அவர் கண்களை மூடியதும் ஏதோ ஒன்று பலத்த அடிபட்டு கீழே சொத்தென்று விழுவதுபோல் சத்தம் கேட்டது. அவர் கண்களை திறந்து பார்த்த போது இவரது கைவிலங்குகள் அவிழ்ந்திருந்தன. ஆனால் அருகில் போலீஸ்காரர் பலத்த அடிபட்டு ரத்தக்காயங் களுடன் கீழே விழுந்து கிடந்ததைக் கண்டு மிகவும் பயத்துடன் பாபாவைப் பார்த்தார்.

பாபாவோ, நீ இப்போது நன்றாக மாட்டிக்கொண்டாய். இப்போது பெரிய அதிகாரிகள் வந்து உன்னை கைது செய்யப்போகிறார்கள் என்றார். இவரோ, தங்களைத்தவிர என்னை காப்பாற்றுவார் வேறு ஒருவரும் இல்லை. எப்படியாவது என்னை காப்பாற்றுங்கள் என்று பாபாவின் பாதங்களை பிடித்துகொண்டு கெஞ்ச ஆரம்பித்துவிட்டார்.

பின்பு பாபா அவரை மீண்டும் கண்களை மூடி திறக்கச்சொன்னார். அவரும் அவ்வாறே செய்ததும் அவர் விடுதலையாகி செயிலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தார். அவருக்கருகில் பாபாவும் நிற்பதைக்கண்டு மீண்டும் அவரின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினார்.

உடனே பாபா அவரை நோக்கி, நீ இப்போது செய்த வணக்கத்திற்கும், முன்பு செய்த வணக்கத்திற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்றார். ஏராளமாக இருக்கிறது பாபா. நீங்கள் இஸ்லாமியராக இருந்து கொண்டு இந்துக்களை கெடுக்கிறீர்கள் என்று நினைத்த தனால், எனது முந்தைய வணக்கம் தங்களிடம் இருந்து பணம் பெறுவதற்காக மட்டுமே செய்யப்பட்டது. ஆனால் இந்த வணக்கமோ தாங்கள் சாட்சாத் கடவுள் என்ற எண்ணத்துடன் செய்யப்பட்டது. தற்போது உங்களை சரியாகப் புரிந்து கொண்டேன் பாபா. உங்களைப் பற்றிய தவறான புரிதலுக்காக என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ளுங்கள் என்று பணிந்தார்.

பாபா அவரின் தலைமீது தனது காக்கும் கரங்களை வைத்து ஆசீர்வதித்து உனக்கு வேரென்ன வேண்டும் என்று கேட்டார். உடனே அவர், எனது குரு இராமதாசரை நேரில் காண வேண்டும் என்றார். பாபா உன் பின்னால் திரும்பிப்பார் என்றார் அவர் பின்னால் திரும்ப அங்கே குரு இராமதாசர்



நின்றுகொண்டிருந்தார். உடனே அவரின் பாதத்தில் விழப்போன போது அவர் மறைந்துவிட்டார். உடனே பாபாவும், தன் குருவும் வேறல்ல, ஒருவரேதான் என்பதை உணர்ந்து கொண்டு பாபாவைப் பார்த்தார். பாபாவும் புன்னகையுடன் மெல்ல மறைந்து விட்டார்.

அவரும் கண்விழித்தார்.

விழித்தபின்பு தான் கண்ட கனவுக் காட்சியைப் பற்றி தீவிரமாகச் சிந்தித்தார். பாபாவைப் பற்றிய அவரது எண்ணங்கள் முற்றிலுமாக மாறிவிட்டது. பாபாவின் பெருமையை அவர் உணர்ந்து கொண்டார். இதன் பின்பு அவர் பாபாவிடம் பணம் பறிக்கும் எண்ணம் அவரிடமிருந்து ஒழிந்தது.

மறுநாள் காலை மசூதியில் பாபாவிற்கு ஆரத்தி நடந்தபோது பாபா அவரை தன்னருகே அழைத்து தனது சட்டைப் பையிலிருந்து இரண்டு ரூபாய்களையும், நிறைய இனிப்பு பண்டங்களையும் அவரிடம் கொடுத்து "அல்லா உனக்கு எல்லா நன்மைகளையும் தாராளமாக அளிப்பார்" என்று ஆசி வழங்கினார்.

அவரது கோஷ்டி பாபாவிடம் இருந்து அதிகமாக பணம் பெற வில்லை. ஆனால் அதற்கும் அதிகமான அவரின் ஆசிகளைப் பெற்றனர். பாபாவின் ஆசி அவர்களுக்கு அதிக பலனளிக்கத் தொடங்கியது. பின்னால் அக்கோஷ்டிக்கு ஏராளமான பணம் கிடைத்தது. அவர்களது ஆன்மீகப் பிரயாணம் எந்த வித தடங்களும் இன்றி சிறப்பாக நிறைவடைந்து. பாபாவின் மொழிகளையும், ஆசிகளையும் நினைத்தவாறே வீடு வந்து சேர்ந்தனர்.

மும்பை புறநகர் பகுதியான பாந்த்ராவில் தெண்டுல்கர் என்ற குடும்பம் ஒன்று வசித்து வந்தது. அக்குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பாபாவிடம் அதீத பற்று கொண்டவர்கள். திருமதி தெண்டுல்கர் அவர்கள். ஸ்ரீ சாயிநாத பஜன்மாலா என்ற 800 பக்கம் கொண்ட பாபாவின் புகழ் பாடும் ஒரு நூலை வெளியிட்டிருந்தார்கள். பாபவைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆர்வம் உள்ளவர்களுக்கு உகந்த நூல் அது.

அந்த நூலை அவர்களது புதல்வன் இரவும் பகலுமாக படித்து முடித்திருந்தான். அப்போது அவன் மருத்துவத்

தேர்வு எழுத வேண்டும். அவனும் அவனது குடும்பத்தினரும் அவன் மருத்துவ தேர்வில் வெற்றி பெறுவானா என்று அவர்களது குடும்ப சோதிடரிடம் கலந்து ஆலோசித்தார்கள்.

சோதிடரோ அவனுக்கு இவ்வருடம் கிரகங்கள் சரியில்லாததால் மருத்துவ தேர்வில் வெற்றிபெற முடியாது அடுத்தவருடம் கிரக சூழ்நிலை சரியாக இருப்பதனால் அடுத்த வருடம் நிச்சயம் வெற்றி பெறுவான் என்று கூறினார். இது அவனை மிகுந்த கவலைக்குள்ளாக்கியது.

அடுத்த சில தினங்களில் அவனது தாயார் சீரடி சென்று பாபாவை தரிசித்தாள். அவளிடம் பாபா கூறினார். "உன் மகனை என்னை நம்பும்படிச் சொல். சாதகம், கைரேகைக்காரர்களின் பித்தலாட்டச் சொற்கள் மீது கவனம் வைக்காமல், படிப்பின்மீது மட்டும் கவனம் வைக்கச் சொல்! தேர்வு வரும்போது பயப்படாமல் எழுத்தச் சொல். அவன் இந்த வருடம் தேர்ச்சி பெறுவது உறுதி! எனது சொற்களை நம்பும்படி கூறு என்றார்.

வீட்டிற்குத் திரும்பிய தாய், மகனிடம் பாபா கூறிய திருவாக்கினை தெரிவித்தாள். மகனும் பாபாவின் வாக்கினை பெரிதாக நம்பி படிப்பதிலேயே தனது கவனத்தை வைத்து தேர்வை எழுதினான். இருப்பினும் அவனது மனதிற்குள் தான் தேர்ச்சிபெற மாட்டோம் என்ற பயம் இருந்தது. ஆயினும் தேர்வின் முடிவு சோதிடர்களின் கூற்றையும்



கிரகங்களின் மோசமான செயலையும் தவிடுபொடியாக்கின. ஆம் மருத்துவத் தேர்வில் பையன் நல்ல மதிப் பெண் பெற்று தேர்ச்சியாகி இருந்தான்.

கிரகங்கள் அவனுக்கு எதிராக இருந்த போதிலும், பாபாவின் பேரருளால் அவன் வெற்றி பெற்றான். வாழ்க்கையில் கஷ்டங்களும், பயமும் வருவது நம்மை சற்றே அசைத்து நமது நம்பிக்கையை உறுதிப்படுத்தவே. முழு நம்பிக்கையுடன் பாபாவைப் பற்றிக்கொண்டு நமது முயற்சிகளை தொடர்ந்து செய்வோமானால் நமது முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பையனின் தந்தை திரு. ரகுநாத் தெண்டுல்கர் பம்பாயில் ஒரு வெளிநாட்டுக் கம்பெனியில் வேலை செய்து வந்தார். அவர் அந்த கம்பெனியில் இருந்து



ஓய்வு பெறும் போது, கம்பெனி நிர்வாகம் அவர் சிறந்த பணியாளர் என்பதால் அவருக்கு ஓய்வூதியம் வழங்க முன்வந்தது எவ்வளவு ஓய்வூதியம் வழங்கலாம் என்று நிர்வாகத்தினரால் ஆலோசிக்கப் பட்டது.

அவர் பெற்றுவந்த மாத சம்பளம் ரூ.150 ஓய்வூதியமாக ரூ.75 கிடைத்தால் வீட்டுச்செலவுகளை பாராமரிக்க முடியும் என்று தெண்டுல்கர் நினைத்தார். ஒருநாள் திருமதி. தெண்டுல்கரின் கனவில் பாபா தோன்றி, " ரூ.100 ஓய்வூதியமாக கிடைக்கச் செய்கிறேன். உனக்கு திருப்திதானே" என்று கேட்டார். திருமதி. தெண்டுல்கர் நீங்கள் எங்களை ஏன் கேட்கிறீர்கள். நீங்கள் எது செய்தாலும் எங்களுக்கு நன்மையே ஆகும் என்று பதிலளித்தார்

பாபா ரூ.100 என்று கூறினாலும், திரு. தெண்டுல்கருக்கு அவரது கம்பெனி ரூ.110 ஐ ஓய்வூதியமாக வழங்கியது. தமது பக்தர்களுக்கு இத்தகைய அற்புதமான அன்பை யும், பாதுகாப்பையும் பாபா எப்போதும் வழங்குகிறார் என்பதில் இன்றுவரை ஐய்யமில்லை.

குவாலியரில் இருந்த கேப்டன் ஹாடே என்பவர் பாபாவின் மிகப்பெரும் பக்தர். வேலைகளின் நிமித்தம் ஒரு வருடமாக சீரடிக்குச்சென்று பாபாவை தரிசிக்க வில்லை. ஒரு நாள் பாபா அவரது கனவில் தோன்றி "என்னை மறந்து விட்டாயா"?

என்று கேட்டார். ஹாடே உடனே பாபாவின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு, "தனது தாயை குழந்தை மறந்து விட்டால் அது எங்கனம் காப்பாற்றப் படும்"என்றார்.

அதன் பின்னர் ஹாடே தோட்டத்திற்குச் சென்று புதிய அவரைக்காய்களைப் பறித்து அதனுடன், நெய், கோதுமை, பருப்பு, மற்றும் தட்சிணையும் பாபாவிற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று நினைத்த போது விழித்துக்கொண்டார். சில நாட்களுக்குப் பின் சீரடியில் உள்ள தனது நண்பருக்கு 12 ரூபாயை மணியார்டர் அனுப்பி 2 ரூபாய்க்கு மளிகை மற்றும் காய்கறிகளும் வாங்கிக்கொண்டு மீதம் 10 ரூபாயை பாபாவிற்கு தட்சிணையாக வழங்கும்படி அனுப்பியிருந்தார். குறிப்பாக விருந்தில் அவரைக்காய் இருக்க வேண்டும் என்று எழுதியிருந்தார்.

அந்த நண்பரும் கடைத் தெருவிற்குச் சென்று எல்லா

பொருட்களையும் வாங்கிவிட்டார். ஆனால் சீசன் இல்லாத தால் அவரைக்காய் மட்டும் கிடைக்க வில்லை. சிறிது நேரத்தில் அவரை நோக்கி ஒரு கூடைக்காரி வந்தாள். அவளிடம் அவரைகாய் இருக்கின்றதா என்று கேட்டார். அவள் கூடையை இறக்க என்ன ஆச்சர்யம் அவளிடம் அவரைக் காய் மட்டும்தான் இருந்தது. உடனே அவர் அனைத்தையும் வாங்கிக் கொண்டு சிறப்பான விருந்தை தயார் செய்ய திரு. நிமோண்கர் அவர்களிடம் ஒப்படைத்தார்.

திரு. நிமோண்கர் அவர்கள் ஹாடே சார்பாக அடுத்த நாள் நைவேத்தியத்தை தயார் செய்து பாபாவிற்கு சமர்பித்தார். குறிப்பாக அவரைக்காய் பொரியல். பாபா நைவேத்தியத்தை சாப்பிட ஆரம்பித்த போது முதலில் அவரைக்காயையே விரும்பி சாப்பிடத் துவங்கினார். இதை தன் நண்பரின் மூலமாக கேள்விப்பட்ட ஹாடே அவர்கள் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப்போனார்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் பாபாவின் கரங்கள் பட்ட ஒரு நாணயம் தனது வீட்டில் இருக்க வேண்டும் என்று ஹாடே ஆசைப்பட்டார். சீரடி செல்லும் தனது நண்பரிடம் ஒரு நணயத்தைக் கொடுத்து இதை பாபாவிடம் கொடுத்து திரும்ப வாங்கிவருமாறு கேட்டுக்கொண்டார். அந்த நண்பரும் சீரடிக்குச் சென்று முதலில் தனது நாணயம் ஒன்றை பாபாவிடம் கொடுத்தார். பாபா அந்த நாணயத்தை வாங்கி தனது சட்டைப் பையில் போட்டுக் கொண்டார்.

பின்பு நண்பர் ஹாடே வழங்கிய நாணயத்தை பாபாவிடம் கொடுத்தார். அதை வாங்கிய பாபா சற்றுநேரம் தன் கைகளில் வைத்திருந்துவிட்டு பின்பு சுண்டிவிட்டு விளையாடினார். பின் அந்த நண்பரிடம், உதி பிரசாதத்துடன் அந்த நாணயத்தை யும் கொடுத்து, இதை அதன் உரிமையாளரிடம் கொடுத்து அவரிடம் இருந்து எனக்கு எதுவும் வேண்டியதில்லை என்று கூறு. அமைதியுடனும், திருப்தியுடனும் அவரை வாழச்சொல் என்று கூறினார்.

அந்த நண்பர் குவாலியருக்குத் திரும்பி புனிதமாக்கப்பட்ட அந்த நாணயத்தை ஹாடே யிடம் திரும்ப அளித்து சீரடியில் நிகழ்ந்த அனைத்தையும் அவரிடம் கூறினார். இம்முறை ஹாடே மிகவும் மகிழ்ந்து பாபா எப்போதும் தாம் விரும்பிய மாதிரியான நல்ல எண்ணங்களை ஊக்குவிக்கின்றார் என்பதை உணர்ந்தார்.

இப்போது வாமன் நார்வேகர் என்பவரின் கதையைக் கேளுங்கள். வாமன் பாபாவை மிகவும் நேசித்தார். அவர் ஒருமுறை ஒரு நாணயத்தை கொண்டு வந்தார். அதன் ஒரு பக்கத்தில் ராமர், சீதா, லட்சுமணர் உருவமும் மற்றொரு பக்கத்தில் கை கூப்பிய நிலையில் உள்ள அனுமன் படமும் பொறிக்கப் பட்டிருந்தன. அந்த நாணயத்தை பாபா அசீர்வதித்து உதியுடன் தனக்கு திருப்பித்தர வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார்.

ஆனால் பாபாவோ அந்த

நாணயத்தை நன்றாக பார்த்துவிட்டு தனது பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். வாமன்ராவ் தனது எண்ணத்தை தெரிவித்து நாணயத்தை ஆசீர்வதித்து திருப்பித் தருமாறு கேட்க, அதற்கு பாபா, அதை ஏன் நான் உனக்கு திரும்பித் தர வேண்டும். அதைநானே வைத்துக் கொள்ளப் போகின்றேன். ஆனால் ஒன்று அந்த நாணயத்திற்காக நீ 25 ரூபாய் கொடுத்தாயானால் கொடுக்கிறேன் என்றார்.

உடனே வாமன்ராவ் பலரிடம் இருந்து கடன் வாங்கி ரூ. 25 ஐ பாபாவின் முன்னால் வைத்தார். அப்போது பாபா, இந்த நாணயத்தின் மதிப்பு ரூ. 25 ஐ விட மிக,மிக அதிகமாகும் என்றவர் சாமாவை அழைத்து சாமா இந்த நாணயத்தை பத்திரமாக வைத்து வழிபடு என்று கூறி அவரிடம் கொடுத்துவிட்டார்.

பாபா இம்மாதிரியான காரியங்களை ஏன் செய்தார் என்பதை சாமானியர்களான நாம் எப்படி ஊகிக்க முடியும். ஒவ்வொருவருக்கும் எது மிகச் சிறந்தது என்பதை பரம்பொருளான சாயி மட்டுமே அறிவார். எனவே கேள்விகள் ஏதுமின்றி ஸ்ரீ சாயியை பணிவோம்! சகல நன்மைகளும் பெறுவோம்.

(தொடரும்)

கோபர்கானில் உதி


ஆர்.கே. காட்கில் பாபாவின் தரிசனத்திற் காக அடிக்கடி சீரடிக்குச் சென்றார். முதலில் இது எளிதாக இருந்தது, ஏனெனில் அவர் அகமதுநகரில் பணியில் இருந்தார். பின்னர் அவர் தொலைதூர இடத்திற்கு மாற்றப்பட்டார். அவர் கனத்த இதயத்துடன். புகைவண்டியில் பயணம் செய்தபோது வண்டி கோபர்காவ் நிலையத்தில் நின்றது.

அப்போது காட்கில், சீரடிக்கு மிக அருகில் இருந்தும் பாபாவின் தரிசனத்தைப் பெற முடியவில்லையே என்று யோசித்தார். அப்போதுஅவரது மடியில் ஒரு உதி பொட்டலம் வந்து விழுந்தது. யார் இதைச் செய்தார்கள் என்று பார்க்க ஜன்னல் வழியாகப் பார்த்தார், ஆனால் யாரையும் பார்க்க முடியவில்லை.



அவர் பக்தியுடன் பொட்டலத்தை எடுத்துப் பாதுகாப்பாக வைத்திருந்தார். சிறிது காலத்திற்குப்பிறகு அவர் சீரடிக்குச் சென்ற போது பாபா,"நீ சீரடிக்கு வர முடியாவிட்டா லும், கோபர்கானில் என் உதியை உனக்குக் கொடுக்கவில்லையா?" என்று கேட்டார். பாபாவின் அன்பைக் கண்டு காட்கில் மகிழ்ச்சியடைந்தார், எனவே அவர் உதியை ஒரு தாயத்தில் வைத்து அணிந்திருந்தார்.

"நான் என் பக்தர்களின் நம்பிக்கையில் முழுமையாக இருக்கிறேன், என்றென்றும் அவர்களின் அன்பிற்காக ஏங்கி, அவர்களின் அழைப்பிற்கு உடனடியாக பதிலளிக்கிறேன்," என்று தாதா பட்டிடம் (சத்சரித்ரா, அத்தியாயம் 11) பாபா கூறினார்.



வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம்

எந்த செயல்களும் அறியாமைக்கு எதிரியுமல்ல, அவையெதுவும் அறியாமை யைத் தீர்க்காது. எப்படி ஒளியானது இருளை நீக்குகிறதோ, அதுபோல ஞானமாகிய அறிவு மட்டுமே அறியாமையைப் போக்கும். என்று பதில் கூற ஆரம்பித்தாள் ஹேம லேகை.

நாம் ஆத்மஞானம் அடைவதற்கு தடையாயிருப்பது அஞ்ஞானம் என்னும் அறியாமை இருளே யாகும். இந்த அறியாமை என்பது ஒரு கரியமேகக் கூட்டத்திற்கு சமம், அது உண்மைப் பொருளை பார்க்க விடாது. எப்படி கரிய மேகக் கூட்டமானது சூரிய, சந்திரனை காணவொட் டாமல் மறைக்கிறதோ அதைப்போல.

உதாரணமாக, ஓர் அறைக்குள் விலையுயர்ந்த இரத்தினக்கற்கள் கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்டு திரையால் மூடப் பட்டுள்ளது. நாம் அந்த அறைக்குள் நுழைகிறோம், கண்ணாடிப் பேழையோ, இரத்தினகற்களோ அந்த அறைக்குள் இருப்பது நமக்கு தெரியாது என்று வைத்துக் கொள்வோம். எவ்வளவு நேரம் நாம் அந்த அறைக்குள் இருந்தாலும், அப்படியே இருக்கவேண்டியது தான், மூடப்பட்டுள்ள திரையை விலக்காமல், அந்த பேழை யையோ, அதனுள்ளிருக்கும் இரத்தினகற்களையோ நம்மால் கண்டு கொள்ள இயலாது. அதுபோல அஞ்ஞானமாகிய திரை விலகாமல், ஆத்மஞான ஒளியானது ஒளிர முடியாது.

ஞானத்தால் கைகூட வல்ல எதையும் வேறெந்த நற்கர்மங்களாலும் தரயிலாது, இதுதான் நம்பிக்கை!



நாராயணன்

உறங்கிக்கிகொண்டிருக்கும் ஒருவன் தான் அடர்ந்த காட்டில் வழி தவறிவிடுவதாகவும், திக்குத் தெரியாமல் சுற்றிக்கொண்டு இருப்பதாகவும் கனவு காண்கிறான். அப்பொழுது திடீரென புலி ஒன்று பாய்ந்து வந்து அவனை பிடித்துவிடுவதாகவும் கனவு கண்டு, "ஐயோ புலி, புலி" என்று அலறி பதறியடித்துக் கொண்டு எழுகிறான், பதட்டத்தில் கட்டிலிலிருந்து கீழே விழுகின்றான். கீழே விழுந்தவுடன் அவனது தூக்கமானது கலைகிறது, கலைந்த நேரத்தில் கனவிலிருந்தும் வெளிவருகிறான்.

வெளிவந்தவுடன் சுற்றும் முற்றும் பார்த்தவன் தான் கண்டது அனைத்தும் கனவு என்றறிந்து பெருமூச்சு விடுகிறான். எனவே, விழிப்புநிலை வந்தவுடன் அவன் கனவில் கண்ட காட்சிகள் அனைத்தும் பொய்யாகின்றன. அதுபோல் அஞ்ஞானம் அல்லது அறியாமை என்பது ஞானம் என்கின்ற அறிவொளி வருகின்ற வரையில் பொய்யான மாயத்தோற்றம் இருந்துகொண்டே இருக்கும். அறியாமை இருக்கும் வரையில் ஆத்மபோதம் என்பது அடையமுடியாது, அஞ்ஞானத்தை ஞானத்தை கொண்டுமட்டுமே அகற்றமுடியும், வேறு எதனாலும் முடியாது.

அஞ்ஞானமாகிய திரையை விலக்க ஞானத்தால் மட்டுமே முடியும் என்பதனை ஸ்ரீஆதிசங்கர் தனது ஸ்லோகம் ஒன்றில் ஒரு அழகான உவமான கதை யின்மூலமாக விளக்குகின்றார். ஓர் அறையில் காரிருள் மண்டிக்கிடக்கிறது, அந்த அறையின் இருளைபோக்க என்ன செய்யவேண்டும்? அறையை கூட்டிப்பெருகினால் இருள் அகன்று விடுமா? அல்லது நாள் கணக்காக உபவாசம் இருந்து பூஜைகள் செய்தால் இருள் விலகிடுமா, ஏழை எளியவர்களுக்கு அன்னதானம், பொன்,பொருள்களை தானம் செய்வதானால் இருள் விலகுமா?. இதுபோன்ற என்ன காரியங்களை மேற்கொண்டாலும் இருள் விலகாது,

செய்வேண்டியவற்றை தவிர்த்து மற்றதை செய்வதானால் என்ன இலாபம்? அப்படியானால், இருள் விலகுவதற்கான உபகரணம் தான் யாது? காரிருள் மண்டியிருக்கும் அறைக்குள் ஒரு சிறிய விளக்கை எடுத்துச் சென்றால் உடனடியாக இருள் விலகிவிடும் அல்லவா! பலகால இருளானது சிறியவிளக்கால் அகற்றப்படு கிறது அதுபோல், ஞானமாகிய தீபத்தின் மூலமாகத்தான் அஞ்ஞானமாகிய இருளானது அகலும்.

செய்த, செய்கின்ற கர்மங்கள் எல்லாம் அஞ்ஞானத்திற்கு எதிரிடையானவை அல்ல. செயல் ஒன்று உண்டெனில், அதற்கான விளைவானது நிச்சயம் உண்டு, அந்த விளைவை அனுபவிக்க மேலும் செயல்களை புரிந்தாகவேண்டும். இது பிரபஞ்ச நியதி, செயலும் விளைவும் இவ்விதம் சுற்றி சுற்றி வரும். அப்படியானால், கர்மங்கள்

அனைத்தும் வீணா? என்றால் இல்லை, அவை மாசுக்களைச் சிறிது சிறிதாக நீக்கி நம்மைத் தூய்மை யாக்குமே ஒழிய ஞானத்தை அளிக் காது. அஞ்ஞான இருளானது ஞான விளக்கால் மட்டுமே அகற்றமுடியும், அப்படி அகற்றப்படும் நேரத்தில் ஆத்ம சைதன்யம் நம்மிடையே ஒளிர ஆரம்பிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு ஹேமசூடன், ஆகமங் களும் சாஸ்திரங்களுமே சில இடங்களில் சூன்யவாதிகளுக்கு ஆதரவாக தானே இருக்கின்றது அப்படியிருக்க எப்படி நம்பிக்கை என்பது வரும்? எதில் நம்பிக்கை வைப்பது என்பதிலேயே குழப்பம் வருகிறதே என்றான். இதைக் கேட்ட ஹேமலேகை, உலகத்தின் உண்மை நிலையினை உணர்ந்தவளாய் தன் கணவனாகிய ஹேமசூடனை நோக்கி பின்வருமாறு கூறினாள் .

"மனித மனமானது குரங்கின் சுபாவத்தை கொண்டது, அது எப்போதும் எதையாவது நினைத்துக்கொண்டே அங்கும், இங்கும் தாவிக்கொண்டே இருக்கும். சலனத்துடன் நிலையற்ற தன்மையினை கொண்டது இந்த மனிதமனம். மனிதர்கள் யாவரும் இந்த மனதின் சுபாவத்தினால்தான் பல்வேறு சங்கடங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளாகின்றார்கள். இதே மனமானது மனிதன் உறங்கும்போது எவ்வித சலனமும் கொள்வதில்லை, அங்கும், இங்கும் தாவியும் குதிப்பதில்லை! அமைதியாக இருக்கின்றது. இப்படிப்பட்ட மனோபாவத்தோடு நான் இப்போது கூறும் விஷயங்களை நிலையான மனதுடன் கவனமாக கேட்பீராக. ஏனென்றால், கவனமின்றி கேட்பதும், கேளாமல் இருப்பதும் ஒன்றுதான் அதனால் எந்த பயனுமில்லை" என்றாள் ஹேமலேகை.

முடிவில்லாத விவாதங்களை விட்டு ஒழித்து, உண்மையான சத்தியத்தின் மீது நம்பிக்கை கொள் பவனே பெரும்பலனை அடை கிறான். ஆன்ம அனுபவத்தை அடைவதற்கு சத்தியத்தின் வாதத் தையும், அதில் நம்பிக்கையையும் வளர்த்துக் கொண்டு சிந்தனை செய்யவேண்டும். வயல்வெளியில் பயிர் செய்பவன், அறிவினால் ஆலோசனை செய்து அந்தந்த காலங்களில் உழவு செய்து சம்பாதிப்பது போல, ஆத்மாவின் நலன்கருதி விசாரத்தினாலும், நம்பிக்கையினாலும் ஞானத்தை அடையவேண்டும். நம்பிக்கையுடன் மனதை ஒருமுகப்படுத்தி விசாரனை செய்பவனுக்கு எந்த விதத்திலும் குறை வராது.

நம்பிக்கையில்லாமல், வீண் விதண்டாவாதத்தில் ஈடுபட்டு சந்தேகப்படுபவர்கள் தமக்குத் தாமே பகைவர்கள் என்பதை அறியவேண்டும்.

நம்பிக்கையாலும், சத்தியத் தின் பெயரிலும் அதிக முயற்சியினை மேற்கொண்டு, முக்தியை அடைவதற்கான சாதனங்களை நாடவேண்டும். அப்படிப்பட்ட சாதனங்கள் அநேகமாக இருந்தாலும் எதனை அடைவதினால் ஒருவனுக்கு துயரம் என்பது உண்டாகாதோ,



அதுவே அவனுக்கு மேன்மை தரக்கூடிய சாதனம் என்பதனை அறியவேண்டும்.

நாம் சற்றே கவனத்தோடு ஆராய்ந்து பார்த்தால் எல்லா இடங்களிலும், எதிலும் துக்கமானது நிறைந்திருப்பது நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் பொன், பொருள், மனைவி, மக்கள், பதவி, புலனின்பம் மற்றும் கல்வி, கேள்வி, இவையாவும் கால தேச நியதிகளுக்கு உட்பட்டு, ஒரு நிலையில்லாத தன்மையிலேயே காணப்படுவதால், இவைகளை துன்பத்திற்கான காரண விதைகள் எனக்கொள்ளவேண்டும். இந்த பிரபஞ்ச சக்தியே மாயாமோகத்தை உண்டுபண்ணி இந்த மனிதனை மாயவலையில் தள்ளுகிறது.

ஒரு சாதாரண செப்படி வித்தைக்காரன் அற்ப மாயத்தால் நம்மை சில வினாடிகளில் மாயவலையில் சிக்கவைக்கின்றான், அவனிடமிருந்தே தப்பமுடியாத நம்மால் எப்படி பிரபஞ்ச சக்தி, பிரம்மத்தின் மாயமோகத்திலிருந்து எளிதாக விடுபடமுடியும்? செப்படி வித்தைக்காரனின் மாயவித்தைக்கு மாற்று வித்தை தெரிந்தவன் எப்படி அதில் சிக்கிக்கொள்ளாமல் தப்புகின்றானோ அதேபோன்று பிரபஞ்ச சக்தி, பிரம்மத்தின் மாயாமோகத்திலிருந்து விடுபட வேண்டுமானால் ஆத்மஞானம் கற்றுத் தெளியவேண்டும். தன்னுடைய உண்மை சொரூபத்தை அறிந்தவன் உடனடியாக மாயா மோகத்திலிருந்து விடுபட்டு நித்திய சுகத்தையடைகின்றான். அந்த உண்மை சொரூபத்தை அறியவைப்பதே ஆத்மஞானம் ஆகும். என்று சற்று நிறுத்தினாள்.

தொடரும்

பாபாவின் கோபம்

ஒருவருக்கு மற்றொருவர் மேல் உண்டாகும் வெறுப்பு, பகை உணர்ச்சியை முழு சக்தியுடன் வெளியிடுவது கோபம். இது அநாகரீகமானது. இருப்பினும் இது சில நேரங்களில் அவசியமாகிறது. நம் எண்ணங்கள் நிறைவேற இடையூறுகள் ஏற்படும்போது கோபத்தை வெளிக் காட்டுவது அவசியமாகிறது.

ராவணன் நிராயுதபாணியாக நின்ற சமயம் ராமனுடைய இயல்பான கருணை என்னும் குணம், அக்கோபத்தை புறந்தள்ளி "இன்று போய் நாளை வா" என இராவணனை கொல்லாமல் திருப்பி அனுப்பியது. இதே போல் பக்தர்களின் நலனுக்கு பாதகம் விளைவிக்கும் சக்திகள் எழும்போது பாபாவும் கோபத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.

அது போன்ற சமயங்களில், மகல்சாபதி, நார்கே, மாதவ்ராவ் போன்ற நெருங்கிய பக்தர்களே பாபாவிற்கு பைத்தியம் பிடித்து விட்டதோ என்று நினைக்கவேண்டியிருந்தது. ஒருவன் கோபவசப்படும் போது கண்முன் நடப்பதே தெரிவதில்லை. ஆனால் பாபா தன் முன்னால் நிற்கும் பக்தனின் மனதில் எழும் எண்ணத்தினை அறிகிறார். இது ஒரு விஷேச தன்மை.


இன்னும் பல நேரங்களில் தான் கோபமாக இருக்கும் நேரங்களில் தன் முன்பு பக்தர்கள் வந்தால் பாபா உடனே அமைதி அடைந்து அவர்களுக்கு அருள் பாலிப்பார். அவரே ஒருவன் வாழ்க்கையின் லட்சியமான அமைதியைப் பெற வேண்டுமாணால் கோபத்தை அடக்க வேண்டும் என்று உபதேசிக்கின்றார்.

புரந்தரே என்னும் பக்தரிடம் பாபா கூறுகிறார். யாராவது உன்னை அவமதித்தாலோ, அவ தூறாகப் பேசினாலோ, உபத்திரம் செய்தாலோ, அவனுடன் சண்டை செய்யாதே! அதை உன்னால் பொறுக்க முடியாமல் போனால் ஒன்றிரண்டு வார்த்தைகளில் பதிலளித்து விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றுவிடு.

அதைவிடுத்து சண்டை செய்து பழிக்குப் பழி வாங்கக்கூடாது.

நீ மற்றொருவருடன் சண்டை செய்யும்போது நான் வெறுப் படைகிறேன். ஒருவன் உன்னிடம் பத்து வார்த்தைகள் பேசினால் நீ ஒரே வார்த்தையில் பதில் சொல்ல வேண்டும். அதுவும் அவசியம் ஏற்பட்டால். அதுவன்றி நீ யாருடனும் சண்டை செய்யக் கூடாது. ஒருவன் மற்றொருவரிடம் கோபத்தை வெளியிடும் போது என் மனம் நொந்து போகிறது.

ஒருவன் மற்றொருவனின் அவதூறுகளை திட மனதுடன்



பொறுத்துக் கொள்வானே யானால் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு பக்தர் இன்னொருவரைப் பற்றி அவர் இல்லாத சமயத்தில் தவறாகப் பேசிக் கொண்டு இருந்தார். அந்த பக்தரை பாபா லெண்டித்தோட்டத்திற்கு அழைத்துச் சென்று, அங்கே திரிந்து கொண்டிருந்த பன்றிகளை சுட்டிக்காட்டி "அங்கே என்ன காண்கிறாய்" என்று கேட்டார். "பன்றி மலத்தை தின்று கொண்டிருக்கிறது" என்றார் பக்தர்.

எவ்வளவு ஆர்வத்துடன் அந்த பன்றி மலத்தை சாப்பிடுகிறது பார்த்தாயா? மனிதன் கழித்த மலத்தை உண்பதில் அதற்கு அவ்வளவு மகிழ்ச்சி. ஆனால் அது நம் கண்களுக்கு அருவருப்பாய் இருக் கிறது. இதுபோவேதான் உன் நடத்தையும் இருக்கிறது.

தன்னுடைய உற்றார், உறவினர், சுற்றத்தார்களையே அவர்கள் இல்லாத போது வசைமாறி பொழிகின்றீர்கள். எத்தனையோ புண்ணியம் செய்ததின் பலனாக ஒருவன் மனிதனாகப் பிறக்கிறான். அதிலும் அதிகமாக குருவை அடைகிறான். அதன்பின்னும் இம்மாதிரி யான செயல்களில் ஈடுபடலாமா? இனி ஒருவரிடமும் குறை காணாதே! உன்னிடம் உள்ள குறைகளையே ஆராய்ந்து பார்! அப்படி செய்தால் உலகம் முழுவதும் உன் வசமாகும். என்றார் பாபா.

மற்றொரு நாள் பாபாவிடம் அனுமதி வாங்காமல்



துவாரகாமாயிக்கு முன்பாக ஒரு கொட்டகை அமைக்கும் பணியில் அவரது பக்தர்கள் ஈடுபடுகிறனர். பாபா சாவடிக்கு தூங்கச் சென்ற வுடன் இங்கு வேலை ஆரம்பமாகும். கொட்டகைக்கு கால்கள் நடுவதற்காக துவாரகாமாயி சுவற்றில் ஓட்டைகள் போட்டு இரும்புக்கம்பிகளை பதித்து விட்டனர்.

காலையில் வந்து பார்த்த பாபாவிற்கு கோபம் தலைக்கேறியது. இரவெல்லாம் சிரமப்பட்டு பதித்த இரும்புக் குழாய்களை எல்லாம் தன் கைகளாலேயே பிடுங்கி எறிந்து விட்டார். பாபாவின் கோபத்திற்கான காரணம் தான் தாயாக நினைக்கும் சின்ன சிதிலமான கட்டிடமான துவாரகாமாயியில் எளிமையாக வசிக்க நினைக்கிறார். இதை நமக்கு வரும் கோபத்தோடு ஒப்பிட முடியுமா? வசதி வாய்ப்புகள் வரவில்லையே என்ற கோபம் வேண்டுமாணால் வரும்.

சியாமாவை ஒரு முறை பாம்பு கடித்து விட்டது. எனக்கு பாபாவே வைத்தியர் என்று சியாமா ஓடிவந்து மசூதியில் ஏறும் சமயம் பாபா கோபமாக கத்துகிறார். "நீ சுத்த பிராமணன் என்றால் மசூதியின் படிகளில் ஏறாதே, திரும்பிப் போய்விடு" என்று கோபப்படுகின்றார்.

சியாமா பயந்து விட்டார். எல்லாமே பாபா என்று ஓடி வந்ததற்கு பாபா கொடுக்கும் பரிசா இது என்று பயந்த சியாமா இனி நான் எங்கு போவேன் என்று பயந்தபடி கீழேயே நின்றுவிட்டார். சிறிது நேரத்திற்குப் பின்பு பாபா கோபம் தணிந்தவராக,"மேலே வா சியாமா இறைவன் அன்பானவன், நீ குணமடைவாய்" என்று ஆசீர்வதித்தார்.

பாபா காட்டிய கோபம் தன் மீதன்று தன் உடலில் கலந்துவிட்ட விசத்தின் மீது என்று பிற்பாடு உணர்ந்து கொண்டார் சியாமா.

உயிரற்ற சடப்பொருட்கள் கூட பாபாவின் சொற்களுக்கு கட்டுப் படுகின்றன. என்ற விந்தையை சத்சரிதத்தில் பல இடங்களில் வாசிக்கிறோம். லட்சம் பிறவிகள் எடுத்தாலும் இந்நிலை நமக்குக் கிடைக்குமா? எனவே பாபாவிற்கு வரும் கோபம் காரியக்கார கோபம். பக்தர்களுக்கு நன்மை செய்யும் பொருட்டு வரும் கோபம். எனவே நினைவில் கொள்ளுங்கள். துளியும் கூட நாம் அவரின் கோபத்திற்கு ஆளாகக்கூடாது. கடவுளின் கோபத்தில் இருந்து குரு நம்மைக் காப்பாற்றுவார். குருவின் கோபத்தில் இருந்து கடவுள் கூட காப்பாற்றமாட்டார் என்பதை எப்போதும் நினைவில் வையுங்கள்.

குரு வாழ்க! குருவே துணை!

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.



குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	– ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	– ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	– ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	– ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	– ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

காணிக்கையின் மகத்துவம்

மும்பை தாதர் என்னும் ஊரில் விட்டல் தேஷ்பாண்டே என்ற 12 வயது சிறுவன் தன் தாய், தந்தை, மற்றும் தாத்தாவுடன் வாழ்ந்து வந்தான். விட்டலுக்கு தாத்தா என்றால் அவ்வளவு பிரியம். தாத்தாவும் விட்டல் மேல் பாசமாக இருந்தார்.

வயதான தாத்தாவிற்கு கண் பார்வை மெல்ல மெல்ல மங்கி முழுவதுமாக பார்வை போனது. தாத்தாவிற்கு கண் பார்வை போனது விட்டலுக்கு மிகவும் வருத்தமாகி விட்டது. தாத்தாவின் தேவைகள் அனைத்திற்கும் விட்டலே உதவி செய்து வரலானான். சில மாதங்களுக்குப் பின் கோவிந்தராவ் மான்கர் என்ற பாபாவின் பக்தரை விட்டலின் தாத்தா சந்திக்க நேர்ந்தது.

அவர் தாத்தாவிடம் நீங்கள் சீரடிக்குச் சென்று பாபாவின் தரிசனத்தைப் பெறுங்கள் அவர் மனது வைத்தால் நிச்சயமாக உங்களது கண்பார்வை திரும்பி விடும் என்றார். அவரின் மேல் தாத்தா மிகுந்த மதிப்பு வைத்திருந்ததால் அவர் கூறியதைப் போன்று சீரடிக்குச் சென்று பாபாவைத் தரிசிப்பது என்று முடிவு செய்தார். ஆனால் அவரது



மகனுக்கு நேரமே இல்லை. ஆகையால் சீரடிப்பயணம் தள்ளிப் போய்கொண்டே இருந்தது.

ஒரு கட்டத்தில் விட்டல் நானே உனக்குத் துணையாக சீரடிக்கு வருகிறேன் தாத்தா நாம் இருவருமே சீரடிக்குச் செல்லலாம் என்று கூற குடும்பத்தினருக்கும் அதுவே சரி எனப்பட்டது. எனவே தாத்தாவும், பேரனும் சீரடிக்குப் புறப்பட்டனர்.

1916 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தாத்தாவும், பேரனும் சீரடியை அடைந்தனர். இருவரும் துவாரகாமாயிக்குச் சென்று பாபாவின் பாதங்களில் பணிந்து வணங்கினர். பாபா அவர்களிடம் 6 ரூபாய் தட்சணை கொடு என்று கேட்டார். பாபா கேட்டதும் விட்டல் தனது டிராயர் பையில் கைவிட்டு பணத்தை எடுத்தான். அவனிடம் ஒரு பத்து ரூபாயும், ஒரு ஐந்து ரூபாயும் மட்டுமே இருந்ததனால் விட்டல் பத்து ரூபாயை பாபாவிடம் கொடுத்தான். ஆனால் பாபா அதை ஏற்றுக்கொள்ளாமல், ஐந்து ரூபாயை கொடு என்று வாங்கிக் கொண்டு இன்னும் ஒரு ரூபாய கொடு என்று பிடிவாதம் பிடித்தார்.

விட்டல் மீண்டும் பத்து ரூபாயை கொடுக்க முயன்றாலும் பாபா அதை வாங்காமல் எனக்கு ஒரு ரூபாய் தான் வேண்டும் என்று மீண்டும், மீண்டும் பிடிவாதம் பிடித்தார். அதனால் விட்டல் தாத்தாவை அழைத்துக் கொண்டு துவாரகாமாயியின் ஒரு ஓரமாக உட்கார வைத்துவிட்டு, இங்கேயே உட்கார்ந்திருங்கள் நான் சில்லரை வாங்கி வருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றான்.

அந்த ஊரில் பத்து ரூபாய்க்கு யாருமே சில்லரை கொடுக்க வில்லை. நீண்டநேரம் சில்லரை கேட்டு அலைந்து களைப்படைந்த விட்டல், மனம் தளர்ந்து அழ ஆரம்பித்தான். அப்போது அவன் முன்னால் ஒரு பெரிய மனிதர் ஒருவர் வந்து ஏன் அழுகிறாய் என்று கேட்டார்.

விட்டல் நடந்தவற்றைக்கூறி, அவனிடம் பாபா மிகவும் பிடிவாத மாக இருப்பதாகக் கூறினான். அதற்கு அந்தப் பெரியவர் அவ்வளவு தானே இதோ நான் உனக்கு சில்லரை தருகிறேன் அதற்காக ஏன் அழுகிறாய் என்று விட்டலிடம் இருந்த பத்து ரூபாயை வாங்கிக் கொண்டு சில்லரை கொடுத்தார்.

விட்டல் அதை வாங்கிக் கொண்டு துவாரகாமாயிக்கு ஓடினான் அங்கு பாபாவின் பாதத்தில் ஒரு ரூபாயை வைத்து வணங்கினான். அவனின் தலை யில் கை வைத்து ஆசீர்வதித்த பாபா என் குழந்தையே! எதற்கும் பயப்படாதே, அல்லா நல்லதே செய்வார். இப்போது உனது வேலை வெற்றியடைந்தது என்றார்.

விட்டல், பாபா கூறியதைக் கேட்டு குழம்பினான். நாம் பாபாவிடம் எதற்கு வந்தோம் என்று கூறவேயில்லை. அவரும் நம்மிடம் எதுவும் கேட்கவேயில்லையே என்றபடி அவரை பார்த்தபடியே நின்று கொண்டிருந்தான்.

பாபா மீண்டும் உனது வேலை வெற்றியடைந்தது என்றார். விட்டல் மேலும் குழம்பியபடி தாத்தாவை அமர வைத்த இடத் திற்குச் சென்றான். ஆனால் அங்கு தாத்தாவை காணவில்லை. பயந்து போன விட்டல் தாத்தா, தாத்தா என்று அழைத்தபடி துவாரகாமா யியை சுற்றிலும் தேடினான். ஆனால் தாத்தாவைக் காண வில்லை.

அதன் பிறகு விட்டல் அழுதுகொண்டே சீரடி கிராமம்



முழுவதும் சுற்றி வந்தான். தாத்தாவை எங்கும் காணோம். தாத்தா எங்கு சென்றாரோ, கண் பார்வையும் இல்லை. எங்காவது விழுந்து அடிபட்டிருப்பாரோ, என சிந்தித்துக் கொண்டே நின்றிருந்தான்.

அப்போது சில்லரை கொடுத்த அதே பெரியவர் அவனிடம் வந்து, நீ ஏன் மீண்டும் அழுது கொண்டிருக்கிறாய் என்று கேட்க, அவரிடம் தன் தாத்தாவை காணவில்லை என்று கூறினான் விட்டல்.

உடனே அவர் சரி உன் அழுகையை நிறுத்து உன் தாத்தா சாதே வாடாவின் படியில் அமர்ந்திருக்கிறார் போய் பார் என்றார்.

உடனே விட்டல் அங்கு ஓடினான். அங்கு அவனது தாத்தா சாதே வாடாவின் படியில் அமர்ந்து கரும்பு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். விட்டலுக்கு கோபம் வந்துவிட்டது. நான் அமர வைத்த இடத்தை விட்டு ஏன் சென்றீர்கள். கீழே விழுந்து அடிபட்டு காயம் ஏற்பட்டு இருந்தால் என்னாவது. நீங்கள் எப்படி அங்கிருந்து இங்கு வந்தீர்கள் என்றான்.

அதற்கு தாத்தா நீ என்னை அங்கு உட்காரவைத்துவிட்டு நீ போனபின்பு என் உடலில் ஏதோ ஒரு மாற்றம் ஏற்பட்டது. என் கண்கள் மிகத்தெளிவாக தெரிய ஆரம்பித்துவிட்டது. நீ திரும்பவந்து பாபாவிற்கு தட்சிணை அளித்ததை நான் இங்கிருந்து மிகத்தெளிவாகப் பார்த்தேன். அதனால்தான் அங்கிருந்து எழுந்து வாடாவிற்கு வந்தேன் என்றார்.

விட்டல் தன் தாத்தாவிற்கு கண் பார்வை கிடைத்துவிட்டதை அறிந்து மிகவும் ஆனந்தம் அடைந்தான். பாபாவிற்கு 6 ரூபாய் தட்சிணை அளித்த அந்த விநாடியில் இருந்து பாபா முழுமையாக குணமடைந்திருக்கிறார் என்பதையும், பாபா நமம்மிடம் தட்சிணை வாங்குவதன் மூலம் நம் கர்மாவை அழித்து நமக்கு நன்மையை செய்கிறார் என்பதையும் விட்டல் நன்கு உணர்ந்து கொண்டான்.

அதன்பின்பு அவர்கள் மகிழ்ச்சியுடன் வீட்டிற்குத் திரும்பினர். பாபாவின் அருளால் தாத்தாவிற்கு கண் பார்வை திரும்பியதை அனைவரும் உணர்ந்து கொண்டு பாபாவிற்கு நன்றியை தெரிவித்தார்கள். ஆனால் விட்டலுக்கு மட்டும் தனக்கு துன்பம் ஏற்பட்ட போதெல்லாம் வலிய வந்து உதவிய அந்த பெரியவர் யார் என்பது மட்டும் புரியவில்லை. உங்களுக்கு புரிகிறதல்லவா?

சாயியை போற்றுவோம்! சகல நன்மைகளையும் பெறுவோம்! ●

16 வது சீரடி புனிதப் பயணம்


திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம்

பகவான் சாயிநாதரின் பேரருளால் 16 வது சீரடிப் புனிதப்பயணம் ஆறு நாட்கள் பயணமாக கடந்த 14.06.2026 ஞாயிற்றுக் கிழமை அன்று மதியம் 2 மணிக்கு சென்னையில் இருந்து மும்பை விரைவு வண்டியின் மூலமாக துவங்கியது.

மறுநாள் மதியம் சீரடிக்குச் சென்ற அனைவரும் தமக்கு ஒதுக்கப்பட்ட அறைகளுக்குச் சென்று சற்று ஓய்வெடுத் துக்கொண்டு பிறகு மதிய உணவை முடித்துக்கொண்டு சாயி தரிசனத்திற்குச் சென்றோம். கூட்டம் சற்று குறைவாக இருந்த காரணத்தினால் பொறுமையாக சாயி பகவானை கண்குளிர கண்டு தரிசித்தோம்.









அதைத்தொடர்ந்து மூன்று நாட்கள் சீரடியை சுற்றி சாயிபகவான் சென்றுவந்த அனைத்து இடங்களுக்கும் சென்று மனதார தரிசித்தோம். சிவநேசன் சுவாமிகள் சமாதியில் நமது குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் சத்சங்கம் நிகழ்த்தி தியானப்பயிற்சி கொடுத்தார். ஒரு நாள் சாம்பாஜிநகர் எல்லோரா குகை கோவில், கிருஷ்ணேஸ்வர் சோதிர்லிங்கம், பத்ரா ஆஞ்சநேயர் ஆலயம், சனிசிங்கனாப்பூர் சென்று தரிசித்து வந்தோம்.









சீரடியில் சமாதி மந்திரிக்கு எதிரில் அமைந்திருக்கும் சாய் மெழுகு கலைக்கூடத்திற்கு சென்றது நல்ல அனுபவமாக இருந்தது. சீரடிக்குச் செல்லும் அனைவரும் கண்டு ரசிக்கவேண்டிய இடம். சாயிநாதருடைய மெழுகுச்சிலைகள் அற்புதமாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றன

அங்கு ஆனந்தமாக அனைவரும் சாயிநாதருடன் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தோம்.








நமது குரு அவர்களின் ஏற்பாட்டின் பேரில் வியாழன் அன்று சீரடியிலும் அதன் சுற்றுவட்டாரத்திலும் ஆதரவற்ற முதியோர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

பகவான் சாயிநாதர் வாழ்ந்த இடங்களில் நாங்களும் ஆறு நாட்கள் பொறுமையாகவும் ஆனந்தமாகவும் தங்கி தரிசித்து வந்தது மனதிற்கு இதமாக இருந்தது. பகவான் சாயிநாதரிடம் அனைவருக்காகவும் வேண்டிக்கொண்டு பிரிய மனமில்லாமல் வெள்ளிக்கிழமை சென்னை to சீரடி விரைவு இரயிலில் புறப்பட்டு சாயிநாதரின் ஆசியுடன் சென்னை வந்து சேர்ந்தோம். பயணத்திற்கு உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், யாத்திரீகளுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளை காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாயராம்

சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்



கட்டிக்குளம் என்ற ஊரில் குப்பமுத்து வேளாளர், கூத்தாயி அம்மாள் என்ற தம்பதியர் வசித்து வந்தனர். மண்பாண்டம் செய்வது இவர்கள் தொழில் மேலும் உள்ளூரில் இருந்த ஐயனார் கோயில் பூசாரியாகவும் இருந்தார் குப்பமுத்து. சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகளின் பக்தர்களாக இருந்த இந்தத் தம்பதியர். அவ்வப்போது சுவாமிகளின் தரிசனம் பெற்று வந்தனர். ஒரு முறை ராமலிங்க சுவாமிகளிடம் திருவருட் பிரசாதம் பெற்ற பாக்கியத்தால், கூத்தாயி அம்மாளுக்கு காளயுக்தி வருடம் ஆடி மாதம் பூராட நட்சத்திரத்தன்று *''1858''* ஜூலை மாதம் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அந்த குழந்தைக்கு *''மாயாண்டி''* எனப் பெயரிட்டனர்.

மதுரையில் இருந்து மானாமதுரை செல்லும் வழியில் இருக்கிறது திருப்பாச்சேத்தி. இங்கிருந்து தென்புறம் சுமார் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அழகிய கிராமம் கட்டிக்குளம். பல ஞானியர் இங்கே சமாதி கொண்டுள்ளனர். போக்குவரத்து வசதி இல்லாத காலத்தில் பாதயாத்திரையாக ராமேஸ்வரம் செல்லும் சாதுக்களும், ஆன்மிக அன்பர்களும் தங்கிச் செல்வதற்கு திருமடங்கள் கட்டிக்குளத்தில் இருந்தன.

உணவருந்தவும், ஓய்வெடுக்கவும் இந்தத் திருமடங்களை சாதுக்களும்,பயணிகளும் பயன்படுத்தி வந்தனர். கட்டிக்குளத்தில் அப்போது இருந்து வந்தவர் சூட்டுக்கோல் ராமலிங்க சுவாமிகள் எனும் சித்தர். மாயாண்டியின் பெற்றோர் தான் பூஜை செய்யும் உள்ளூர் ஐயனார் கோயிலுக்கு சிறுவனான மாயாண்டியையும் கூட்டிச் செல்வது வழக்கம். அப்படி ஒரு நாள் கூட்டிச் சென்றபோது

யோகி ஸ்ரீராம் பாபா

மகனை வெளிக் கூடத்தில் அமர்த்தி வைத்து விட்டு, ஐயனார் பூஜைக்காகக் கருவறைக்குள் சென்றார் குப்பமுத்து.

ஐயனாரின் திருமந்திரங்களைச் சொல்லி அவருக்கு அபிஷேக ஆராதனைகளை முடித்து விட்டு வியர்வை சொட்ட வெளியே வந்த குப்பமுத்து அதிர்ந்தார். அவர் கண்ட காட்சி பதற வைத்தது. குத்துக்காலிட்டுத் தியானத்தில் அமர்ந்திருந்த சிறுவன் மாயாண்டியின் தலைக்கு மேலே நல்ல பாம்பு ஒன்று படமெடுத்து ஆடாமல் அசையாமல் இருந்தது. அதன் உடற் பகுதியும் வால் பகுதியும் சிறுவனின் உடலைச் சுற்றி இருந்தன. கடும் விஷம் உள்ள நாகம் மகனைக் கொத்திவிடப் போகிறதோ என்கிற பீதியில், "ஐயனாரப்பா... எம் மகனைக் காப்பாத்து" என்று கருவறையை நோக்கி ஓங்கிக் குரல் கொடுத்தார் குப்பமுத்து.

பிஞ்சு மகனைப் பார்க்க வாஞ்சையுடனும் பயத்துடனும் திரும்பினார். என்னே அதிசயம்! நாகத்தைக் காணோம். தியானத்தில் இருந்து அப்போதுதான் மீண்டிருந்தான் மாயாண்டி. 'மகனிடம் ஏதோ ஓர் அபூர்வ சக்தி இருக்கிறது' என்பதை அப்போது உணர்ந்து கொண்ட குப்பமுத்து, அவனை அப்படியே வாரி அணைத்துக் கொண்டார். இதே போன்ற சம்பவங்கள் பின்வந்த நாட்களிலும் தொடர்ந்தன. ஒரு கட்டத்தில் விஷயம் ஊருக்குள் பரவி, மாயாண்டியை ஒரு தெய்வ சக்தியாகவே அனைவரும் பார்க்க ஆரம்பித்தனர்.



பள்ளிப் படிப்பு ஒரு பக்கம். ஆன்மிகத் தேடல் மறுபக்கம் என இருந்தார் மாயாண்டி. தன் வீட்டில் இருந்த பரம்பரைச் சொத்தான வைத்தியச் சுவடிகளையும், சித்தர் நூல் தொகுதிகளையும் தூசி தட்டி எடுத்துப் படிக்க ஆரம்பித்தார் அவ்வப் போது மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்று அதிகாலை பூஜையையும், அர்த்த ஜாம பூஜையையும் தரிசிப்பதை வழக்கமாகக் கொண்டார் மாயாண்டி.

இந்தக் காலத்தில் பெற்றோரின் வற்புறுத்தலால், புளியங்குடியைச் சேர்ந்த மீனாட்சி எனும் உறவுக்காரப் பெண்மணி, இவருக்கு மனைவியாக வாய்த்தாள். இல்லற வாழ்க்கையில் ஒரு மகனும் மகளும் உண்டு. ஒரு முறை பழநி

பாத யாத்திரைக்குச் செல்லக் கையில் பணம் இல்லாததால், மனைவி அணிந்திருந்த தங்க ஆபரணங்களை விற்று, யாத்திரையை மேற்கொண்டார்.

மாயாண்டியின் ஆன்மீகத் தேடுதல்களுக்கு எந்தத் தடையும் போட்டதில்லை அவரது மனைவி. தவிர, தன் கையில் இருக்கும் பணத்தைக் கொண்டு ராமேஸ்வரம் செல்லும் சாதுக்களுக்கு அவ்வப் போது உணவளித்தும் மகிழ்ந்தார் மாயாண்டி. மாயாண்டி சுவாமிகளை இறைவன் எந்தப் பணிக்காக அனுப்பி இருக்கிறான் என்பது, அவனுக்கு மட்டும்தானே தெரியும்?!

இல்லறத்திலேயே இருந்து விட்டால், எதிர்கால சமுதாயத்துக்கு என்ன பயனை செய்து விடமுடியும்? மாயாண்டியை இறைவன் ஆட்கொண்டான். விளைவு இல்லறம் இனிக்கவில்லை. தவத்திலும் யோகத்திலும் காலத்தை ஓட்டினார். சிட்டாய்ப் பறக்க விரும்பினார். தவத்திலும் சமாதி நிலையில் உடல் கூட வேண்டும் என்று விரும்பினார்.

அதற்கு முன் தீட்சை பெற வேண்டுமே! உபதேசம் செய்வதற்கு ஒரு குரு வேண்டுமே! இந்த வேளையில்தான் ராமேஸ்வரத்துக்கு யாத்திரை சென்று கொண்டிருந்த தஞ்சாக்கூர் செல்லப்ப சுவாமிகள் என்பவர், கட்டிக்குளம் வந்தார். அவரைச் சந்தித்துத் தன்னை சீடனாக்கிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். செல்லப்ப சுவாமிகளும் மாயாண்டியை அரவணைத்து அவருக்கு உபதேசம் செய்து வைத்தார். துறவறத்துக்கான திறவுகோல் கிடைத்தாகி விட்டது.

ஆனால், இல்லறத்தில் இருக்கும் மனைவி மற்றும் பெற்றோர் ஆகியோர் இந்த முடிவுக்கு உடன்படுவார்களா? இல்லையே! துறவறம் ஏற்று வீட்டை விட்டுப் புறப்படும் முடிவில் இருந்த மாயாண்டியை தடுத்து நிறுத்தப் பார்த்தார்கள் பெற்றோரும், மனைவியும். ஆனால், மாயாண்டி சுவாமிகள் மசியவில்லை. தான் எடுத்த முடிவில் உறுதியாக இருந்து, கட்டிய கோவணத்துடன் வீட்டை விட்டுப் புறப்பட்டார். சித்தமெல்லாம் சிவ மயம்! கன்யாகுமரி, கோட்டாறு, சுசீந்திரம், பொதியமலை, ராமநாதபுரம், ராமேஸ்வரம், உத்தரகோசமங்கை உட்பட பல திருத்தலங்களைத் தரிசித்தார்.

ஆங்காங்கே சமாதி நிலையில் கூடினார். மதுரை மீனாட்சி அம்மனும், திருப்பரங்குன்ற முருகனும் அவரை ஈர்த்தனர். இறுதியாக, அவர் வந்து சேர்ந்தது திருக்கூடல்மலை எனப்படும் காகபுசுண்டர் மலைக்கு. இந்த மலையில் உலவும் சித்தர்களோடு கலந்து பேசினார். அரூப நிலையில் இருக்கும் சித்தர்களும் மாயாண்டி சுவாமிகளுக்கு ஆசி வழங்கினர். காகபுசுண்டர் மலையைத் தன் நிரந்தர வாசஸ்தலமாக்கிக் கொள்ள வேண்டும் என்று அவருக்குள் ஒரு அருள் வாக்கு எழுந்தது.

சௌமிய வருடம் பங்குனி மாதம் சஷ்டி தினத்தன்று இரவு ஒன்பது மணிக்கு விளாச்சேரி

பெரியசாமி சிவாச்சார்யர், விராட்டிப்பத்து பொன்னையா சுவாமிகள் மற்றும் சில அடியார்களோடு திருப்பரங்குன்றம் முருகப் பெருமான் ஆலயத்துக்குச் சென்றார். தரிசனம் செய்தார். அன்றைய இரவுப் பொழுதை சரவணப் பொய்கையில் கழிக்க விரும்பினார். ஈசான்ய மூலையில் உள்ள படித்துறையில் தங்கி, விடிந்ததும் முருகப் பெருமானை தியானித்து குளத்தில் மூழ்கினார். மண் எடுத்தார். அதை ஒரு சிவ லிங்கமாகப் பிடித்து, காகபுசுண்டர் மலையின் மேல் பக்கம் தான் தங்கும் குகையில் பிரதிஷ்டை செய்தார்.

காகபுசுண்டர் மலை அன்றைய தினத்தில் இருந்து மேலும் புனிதத்தைப் பெற்றது. அன்றிலிருந்து மாயாண்டி சுவாமிகளின் சித்து விளையாட்டுகள் துவங்கின. தன்னை நாடிவந்த மக்களுக்கு அநேக நன்மைகளை செய்துவந்த மாயாண்டி சுவாமிகள் தனது இறுதிகாலம் வரை அங்கேயே தங்கி தவமியற்றி சீவசமாதியானார்.

அவரது சமாதி திருத்தலம், மதுரை மாநகரத்தில் இருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் திருப்பரங்குன்றத்தில் உள்ள காகபுசுண்டர் மலையில் அமைந் திருக்கிறது. திருப்பரங்குன்றம் தியாகராஜர் பொறியியல் கல்லூரி நிறுத்தத்தில் இறங்கி அங்கிருந்து பத்து நிமிடங்கள் நடந்தால், காகபுசுண்டர் மலை வந்து விடும்.


காகபுசுண்டர் மலையில் அடிவாரத்தில் கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி



களின் சமாதி திருக்கோயிலும், மலைக்குச் செல்லும் வழியில் மாயாண்டி சுவாமிகளின் சீடரான சோமப்பா சுவாமிகளின் திருச்சமாதியும் அமைந்துள்ளது. தவிர வேலம்மாள், இருளப்பக் கோனார், மூக்கையா சுவாமிகள் இப்படி சுமார் பத்துக்கும் மேற்பட்ட சமாதிகள் இந்த காகபுசுண்டர் மலைப் பகுதியில் அமைந்துள்ளன. இந்த மலையின் புராணப் பெருமைகளை உணர்ந்த கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள், இதைத் தன் தவப் பணிக்குத் தேர்ந்தெடுத்து இங்கே அமர்ந்தார். 'காகபுசுண்டர் மலை, பழநிமலையைப் போன்றது' என்றே மாயாண்டி சுவாமிகள் அடிக்கடி குறிப்பிடுவாராம்.

திருப்பறங்குன்றம் செல்லும் பக்தர்கள் மாயாண்டி சுவாமிகளை தரிசிக்க மறக்காதீர்கள். ●

ஞானப் பாதை



எல்லா சமயங்களின் சாரமும், முடிவும் எதை நோக்கி செல்கிறது. நாம் வழிபடும் கடவுள் ஒருநாள் நம் கண்களுக்கு காட்சி கொடுக்கும் என்பதை நோக்கித்தான் அல்லவா? ஆனால் நான் அவ்வாறு கருதவில்லை.

பாபாவை ஆழ்ந்து தியானித்தால் அவர் எனக்கு காட்சியளிக்கிறார். ஆனாலும் அத்தகைய தோற்றத்தை நான் இயல்பாகத்தான் எடுத்துக் கொள்கிறேன். ஏனெனில்,பாபா எனக்கு வெளியில் இருப்பதை நான் எப்போதும் விரும்புவ தில்லை. அதற்குப்பதில் பாபாவாகவே மாறிவிட வேண்டும் என பிராத்திக்கிறேன்.

சாயி எல்லாமுமாக இருக்கிறார். ஒரு முனை நான் என்றால், இன்னொரு முனையில் சாயி இருக்கிறார் எனும் போது அவரைத்தேடி நான் ஏன் அலைய வேண்டும். அப்படி அவரைத்தேடி நான் ஓடுகிறேன் என்றால் நான்

முட்டாள் அல்லவா? கையில் இருக்கும் வெண்ணையை விடுத்து நெய்யைத் தேடி ஓடின கதையாக இருக்காதா?

என் கையில் இருக்கும் கயிற்றை இறுக்கப் பிடித்துக் கொண்டு, மெல்ல, மெல்ல என் நற்குணங்களால் முன்னேறினால் நான் சாயிடம் சென்று சேர மாட்டேனா. சேர்ந்து தானே ஆக வேண்டும். ஏனெனில் கயிற்றின் இன்னொரு முனையில் சாயி மட்டும் தானே இருக்கிறார். கையில் கயிறும் இல்லை, மனதில் நம்பிக்கையும் இல்லை என்றால் என்ன செய்வது?

இருவகை பொருட்களின் சேர்க்கையே "நான்" என்பது. ஒன்று வெளியே காணப்படும் ஸ்தூல சரீரம், இன்னொன்று நுண்ணிய சூட்சும வடிவம். ஸ்தூல சரீரத்தில் பெரும்பாலும் கீழ்தரமான பகுதி மட்டுமே செயல்படும். ஆனால் சூட்சும சரீரத்தில், கீழ்த்தர மான பகுதியும், அதோடு கண்ணியமான உயர்தரப்பகுதியும் உள்ளது. இவ்வுயர்தரப் பகுதியை செயல்படுத்த ஞானத்தினால் மட்டுமே முடியும்.

கீழ்த்தரமான பகுதி களே "நான்" என்ற எண் ணங்களை வளர்த்து அறுவடை செய்கின் றன. பக்தியில் "நான்" அதிகம் வெளிப்படும். எல்லாவற்றையும் உன்னிப்பாக கவனித்துப்பார்த் தால் "நான்" தான் கடவுளுக்குச் செய்கிறேன் என்றே வரும்.

சூட்சும சரீரத்தின் கண்ணிய மான பகுதி நானே அவனாவேன். "அஹம் பிரமாஸ்மி" நானே அவனானவுடன் "நான்" என்ற பதம் அங்கில்லை. எங்கும் இருப்பது அவனே, ஒருவனே அல்லவா? அதுவே ஏகத்துவமாகும்.

இருக்கட்டும், நான் ஆன்மா, பகவான் சாயி, இதைத்தவிர வடிவங்கள் யாவும், எண்ணங்களின் பிரதிபலிப்புகளே, இப்போது "நான்" ஆன்மா என்ன செய்ய வேண்டும்.

இன்னும் "நான்" உடல் என்ற ஸ்தூல சரீரத்தின் மீது மாயை இருந்தால் இதர வடிவங்களின் மீது மனதை செலுத்தி மாயையில் உழல்வேன். ஆனால் இப்போது "நான்" ஆன்மா என்பதை உணர்ந்து விட்டேன். அப்படியானால் நான் பரமான்மாவோடுதான் இணைய வேண்டும். ஆகவே பகவான் சாயி என்னுள் புகுந்து எனது உயர்நிலையை ஆக்ரமிக்க வேண்டும். இந்நிலையை எட்டவே நான் விரும்புவேன். ஆகவே, ஜபம், தியானம், கனவின் வழியாக எனக்கு வெளியே, பாபா தோன்றுவது எனக்கு திருப்தியளிக்கவில்லை.



பாபாவின் சேவையில் பத்தாண்டுகளாக புத்துணர்ச்சி யோடு சேவை ஆற்றிவரும் ஓர் அன்புச் சகோதரி என்னிடம் பேசிக் கொண்டிருக்கும் போது கூறினாள்.

சாய்ராம் வியாழக்கிழமை தோறும் ஒரு ஐம்பது நபர்களாவது பூஜைக்கு வந்துவிடுகிறார்கள். பஜனை, பூஜை, அன்னதானம் என்று எங்கள் வீடே அமர்களப்பட்டுவிடும்.வருகின்ற அத்தனை பேருக்கும் சாயியிடம் பிரார்த்தனை வைக்கிறேன். அனைவருக்கும் உடனே நடந்து விடுகிறது. சாயி நடத்தி வைக்கிறார். ஆனால் என்று நிறுத்தினார்.

நான் ஆர்வத்தோடு, ஆனால் என்ன என்றேன்,

எனக்குத்தான் எதுவுமே நடக்க மாட்டேன் என்கிறது. என்னுடைய பிராத்தனைக்கு பாபா செவிசாய்ப்பதே இல்லை என்றார்.


எனக்கு சிரிப்புத்தான் வந்தது. மெல்ல சிரித்துவிட்டு பிறகு கூறினேன். உங்கள் பிரச்சினை எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனாலும் உங்களிடம் வருகிறவர்களின் பிரச்சினைகள் தீர்வதற்கு வழி காட்டுகின்ற இடத்தில் பாபா உங்களை வைத்திருக்கிறாரே, அதை நீங்கள் யோசித்தீர்களா? இதைவிட பாபா உங்களுக்கு என்ன மேன்மை செய்துவிட முடியும். மேலும் சற்று பொறுமையாக ஆழ்ந்து சிந்தித் தீர்களேயானால், நீங்கள் மற்றவர் களுக்கு கூறும் பதிலே உங்கள் பிரச்சனைக்கும் தீர்வாக இருக்கலாம்.

அடுத்தவர்க்கு சேவை செய்வதை "நான் செய்கிறேன்" என்று ஆணவமாக எடுத்துக் கொண்டதனால் கூட உங்களுக்கு புரியாமல் இருக்கலாம். ஆகையால் உங்கள் சொந்த பிரச்சனைக்கு பாபா தனியாக தீர்வு சொல்ல வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம் அல்லவா? தவறில்லை தான், சற்று கோபப்படாமல் சிந்தித்துப் பாருங்கள்.

அடுத்தவர்களுக்கு சேவை செய்யும் அந்த இடத்தில் உங்களுக்கு பதில் வேறு யாரையாவது பாபா நியமித்திருக்கலாம் அல்லவா? உங்களுக்கு அல்லவா சாயி அந்த இடத்தை கொடுத்திருக்கிறார். பாபா உங்களுக்கு பட்டுத்துணி போர்த்தி யிருக்கிறார். நீங்களோ கிழிந்த துணியை எதிர்பார்த் திருக்கிறீர்கள். தவறு உங்கள் மீது தானே!

தயவுசெய்து உங்கள் பார்வையை சற்று விசாலமாக்குங்கள். "நான்" என்ற அகங்காரம் மிக்க பத்திப்பாதையில் இருந்து சற்றே ஞானப்பாதையில் திரும்புங்கள். உங்களையும் உங்கள் பக்தியையும் குறை கூறவில்லை. குறை கூறுவ தற்கு நீங்கள் நாத்திகர் அல்ல. ஆன்மீகத்தில் உள்ளவர்கள் தான். நாத்திகளிடம் உள்ள குறைகளை விட ஆஸ்திகர்களிடம் அதிக குறைகளும், மூட நம்பிக்கைகளும் உள்ளன. உங்களை வழி நடத்திச் செல்பவர்களே அப்படி இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் பாவம்.

இப்படித்தான் ஒருமுறை பாபாவை தரிசிக்க வெகு தொலைவில் இருந்து ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் வந்து கூட்டத்தோடு கூட்டமாக வந்து நின்றிருந்தார். பாபா ஒவ்வொருவராக ஆசிர்வதித்து தன் முன்பாக உள்ள பிரசாதங்களையும், பழங்களையும், கொடுத்தனுப்பிக் கொண்டிருந்தார். பாபா தன் கைப்பட கொடுத்த பொருட்களை பக்தர்கள் பொக்கிஷமாக கருதி



கண்களில் ஒற்றிக் கொண்டு எடுத்துச் சென்றனர்.

கூட்டம் வேறு அன்று மிக அதிகமாக இருந்தது. பாபா முன்பாக இருந்த பிரசாதப் பொருட்கள் வேறு தீர்ந்துவிடும் போல் இருந்தது. அந்த மனிதரோ தன் முறை வரும்போது பாபா கையால் நமக்கு பிரசாதம் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற கவலையோடு கூட்டதிற்குள் முண்டியடித்துக் கொண்டிருந்தார்.

பாபா சட்டென்று அந்த மனிதனை நோக்கி கைநீட்டி அழைத்தார். அவரும் வியப்போடு பாபாவின் அருகே வந்து பவ்யமாக நின்றார். பாபா உடனே அது வரை தன் கால்களை பிடித்துவிட்டு கொண்டிருந்த மாதவராவை நகரச் சொல்லிவிட்டு அந்த மனிதரை நோக்கி நீ பிடி என்றார்.

என்ன ஒரு கொடுப்பினை. பாபாவின் கால்களை பிடிக்க அனைவருமே போட்டி போட்டுக் கொண்டு நின்றிருக்க யாரோ ஒரு புதியவருக்கு அந்த வாய்ப்பு கிட்டிவிட்டதே! சுற்றியிருந்தோர் அப்புதியவரை ஆச்சரியத்துடன் நோக்க, அவரும் உடனே ஆனந்தத்துடன் பாபாவின் கால்களை பிடித்து விட ஆரம்பித்தார். ஆனால்

அவருடைய எண்ணமெல்லாம் பிரசாதத்தின் மேலேயே இருந்தது.

கூட்டமெல்லாம் சென்றதும் இவர் எண்ணியது போலவே பிரசாதமோ, பழங்களோ எதுவுமில்லை. பாபாவும் சட்டென்று எழுந்து கொண்டு "அப்துல்லா விரிப்பை உதரிப்போடு" என்று கூறிக்கொண்டு கீழே இறங்கிப்போய் விட்டார்.

அந்த மனிதருக்கோ மனம் மிகவும் வருத்தமாகிப் போனது. சே! இவ்வளவு நேரம் காத்திருந்தும் பாபா கையால் பிரசாதம் கிடைக்கவில்லையே, என்று வருத்தமுற்றார். பக்தி அம்மனிதனை எல்லாவற்றிலும் ஒரு பகுதியை மட்டுமே பார்க்க கற்றுக் கொடுத்திருக்கிறது. ஞானம் எல்லாவற்றையும் பார்க்கும்.

பாபா என்று ஒருவர் அங்கு இல்லையெனில் அங்கு கூட்டமோ, பிரசாதமோ, விழாவோ, ஆரத்தியோ, ஒன்றுமில்லை.

நாமும் நமது பிரச்சனைகளுக்காக பாபாவே கடவுள் என்றுதான் பாபாவை அணுகுகிறோம். அவரும் நாம் சென்ற உடனேயே நமக்கு பொன்னாடை போர்த்துகிறார். யாரை நான் கடவுள் என்று நினைத்திருந்தேனோ, அவரே என்னை அழைத்து அருகில் அமர வைத்திருக்கிறார்.

இதற்கு மேலும் நான் பிரசாதத்தை எதிர்பார்த்தால் அது "பக்தி". பாபாவே என்னிட மிருக்கிறார். அவரை விட உயர்ந்தது இவ்வுலகினில் வேறேதும் இல்லை என்றால் அது "ஞானம்".

பாபாவை அனைவரும் பக்தி மார்க்கத்திலேயே பார்க்க விரும்புகிறார்கள். ஒருவரும் அவரை ஞான மார்க்கத்தில் பார்க்க விரும்புவதில்லை.

பக்தி மார்க்கத்தில் என்றால் நமக்கு பிடித்த மாதிரி பாபாவை மாற்றிக் கொள்ளலாம். பாபா கூறியதாக நாம் எதை வேண்டுமானாலும் மனத் திருப்திக்காக கூறிக்கொள்ளலாம்.

பாபாவிடம் பக்தி செலுத்துவதில் மனிதர்களுக்குள் பல ஏற்றத் தாழ்வுகளை நாமே உருவாக்கிக் கொள்ளலாம். மொத்தத்தில் பாபாவை, தம்மை வளப்படுத்தி கொள்வதற்கும், தமது லௌகீக தேவைகளுக்கும் வேலைக்காரனாக வைத்துக்கொள்ளலாம்.

ஞான மார்க்கமென்றால் பாபாவிற்கு பிடித்த மாதிரி நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். அது இங்கே முடியாதே!

நாம் அனைவரும் பாபாதான் எனக்கு எல்லாமே என்போம். பாபாவே வந்து உன் உயிரை கொடு என்றால் கொடுத்து விடுவோமா?

எப்படியோ நமக்கு பாபாவை பிடித்தது போல் நடித்துக் கொண்டிருக்கிறோமே அன்றி பாபாவிற்கு நம்மை பிடிப்பது போல் நடக்கக்கூட இல்லை என்பது கண்கூடு.

இறைவன் பாபாவின் சாம்ராஜ்யத்தில் நாம் மெய்ஞான முத்தெடுக்க வேண்டும் எனில் "பாபாவின் வாழ்வியலை" ஞான மார்க்கம் எனும் கண்ணாடியின் மூலம் நோக்குவது அவசியமாகிறது.

அதிசயங்கள் செய்யும்
அமிர்த பானம்



"உணவே மருந்து, மருந்தே உணவு" என்னும் உன்னத வாழ்வியலைப் பின்பற்றித்தான், நம் முன்னோர்கள் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்தார்கள். இன்றைய வாழ்க்கை முறை, பணிச்சூழல், உணவுப் பழக்கம் போன்றவை முற்றிலும் மாறிவிட்டன. விளைவு, முன்பெல்லாம் வயதானவர்களையே அதிகமாக காவு வாங்கிய இதய நோய்கள் இப்போதெல்லாம், இளம் வயதிலேயே பலி கேட்கின்றன.

இன்றைக்கு நவீன மருத்துவத்தின் உதவியுடன் பல்வேறு முன்னேற்றங்களை எட்டிய நமக்கு இன்னமும் சவாலாக இருக்கக் கூடியவை இதய நோய்கள். ஏகப்பட்ட செலவு, தொடர் சிகிச்சை, காலம் முழுவதும் மாத்திரை மருந்துகள் என வாழ்க்கையையே முடக்கிப்போடும் இதய ரத்தக்குழாய் அடைப்பை இந்த எளிய மருந்து மூலம் குணப்படுத்திவிட முடியும் என்ற செய்தி ஆச்சர்யத்தை உருவாக்கியுள்ளது. பலரும் அந்த "மருந்து உணவை" தற்போது பரிட்சித்துப் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.



இந்த மருந்தின் மூலப் பொருள்களாக சொல்லப்பட்டுள்ள எலுமிச்சை, இஞ்சி, பூண்டு, ஆப்பிள் சிடர் வினிகர், தேன் ஆகிய ஐந்து பொருள்களும் சிறந்த மருத்துவக் குணம் கொண்ட உணவுப் பொருள்கள்தாம். இந்த பொருள்கள் அனைத்துக்குமே ரத்தக் குழாய்களை சுத்தப்படுத்தும் பண்பு கொண்டவை.

நவீன மருத்துவம் இல்லாத காலத்திலும் நம் முன்னோர்கள் உணவின் மூலமாகவே நோய்

களிலிருந்து தங்களைக் காத்துக் கொண்டனர். அப்படி, நம் முன்னோரின் அனுபவ ஆராய்ச்சிகளில் உணர்ந்த விஷயங்களை அடுத்தடுத்த தலைமுறை களும் வாய்மொழியாக கொண்டு சேர்த்துள்ளனர். அப்படி கிடைக்கப்பெற்ற வாய்வழி மருத்துவத்தின்படி இது தயாரிக்கப் பட்டிருக்கிறது.

உணவே மருந்தாக இருப்பது மிகவும் நல்லது. எலுமிச்சை, இஞ்சி, பூண்டு, ஆப்பிள் சிடர் வினிகர், தேன் ஆகியவை உணவுப் பொருள்கள்தான். மேலும் இவை எப்படி வேலை செய்யும் என்று அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். புளிப்புச் சுவை இதய ஆரோக்கியத்துக்கு நல்லது. எலுமிச்சை, ஆப்பிள் சிடார் வினிகர் ஆகியவை அதிக புளிப்புச் சுவை உடைய உணவுகள். இவற்றில் உள்ள சத்துகள் ரத்தக் குழாய்களைச் சீராக இயங்க வைக்கும். 'புளிப்புக்காடி' என்னும் வினிகர் எளிதாக உட்கிரகிக்கக்கூடியது. ரத்தக்குழாயில் படிந்திருக்கும் கொழுப்பை இது கரைத்து விடும்.

இஞ்சி மற்றும் பூண்டு ஆகியவை காரச் சுவை கொண்டவை. பூண்டுச் சாற்றுக்கு ஆயுர்வேதத்தில் `கடுரசம்' என்று பெயர். பூண்டு கொழுப்பைக் குறைக்கும் என்பது பலரும் அறிந்ததுதான். அதேபோல, ரத்தக் குழாயில் படியக்கூடிய கொழுப்பையும் கரைக்கக்கூடியது. அதுமட்டுமல்லாமல் ரத்தக் குழாய் களில் ரத்தம் உறைதலைத் தடுக்கும் பண்பும் இதற்கு உண்டு. அதேபோல, இஞ்சி கல்லீரல் செயல்பாட்டுக்கும், உடலின் வளர்சிதை மாற்றத்துக்கும் பெரிதும் துணை புரிகிறது.

இஞ்சிக்கும் ரத்த நாளங்களில் படியக்கூடிய கொழுப்பைக் குறைக்கும் தன்மை உள்ளது. இந்த மருந்துக் கலவையை எடுத்துக் கொண்டால் நம் உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகள் கரையும். உடலில் உள்ள கெட்ட கொழுப்பு கள், கழிவுகள் நீங்குவதால் ரத்தம் சுத்திகரிக்கப்படும். ரத்தக் குழாய் களில்உள்ளகொழுப்புகளைகரைத்து ரத்த ஓட்டத்தைச் சீராக்கும்.


மேலும், உடல் எடை குறைக்க, சர்க்கரை நோய் வராமல் தடுக்க, ரத்தக் கொழுப்பைக் குறைக்க என பலவழிகளில் உடல் ஆரோக்கியத்துக்கும் இந்த மருந்து உதவும். மாரடைப்பு உள்ளிட்ட பல்வேறு இதய பாதிப்புகளுக்கு காரணமான உடல் பருமன் பிரச்னைக்கும் தீர்வு கிடைக்கும்.

ஆரோக்கியமான உடல்நிலை உள்ளவர்கள், ஆரம்ப நிலை யில் உள்ள இதய நோயாளிகள், ஆங்கில மருந்துகள் எடுத்துக்கொள் பவர்களும் இதை தாராளமாக எடுத்துக்கொள்ளலாம். கடுமை யான நோய்ப் பாதிப்புக்கு உள்ளான வர்கள், தகுந்த மருத்துவரிடம் ஆலோசனை பெற்ற பிறகு மருந்து களை உட்கொள்வதே நல்லது.

இந்த அற்புதமான "மருந்து உணவை" நமது சாய் தியானாலயா "அமிர்த பானம்" என்ற பெயரில் தயாரிக்கிறார்கள். தேவைப் படுவோர் கீழ்கண்ட தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு வாங்கிபயன்பெறுங்கள். செல் நம்பர்: 9941816692.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

சங்கர் மகாராஜ் சரிதம்



இந்த அத்தியாயத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட அப்பாவின் திருமணம், அவரின் குடும்ப வாழ்க்கை மற்றும் குழந்தைகள் பற்றி அறிந்துகொள்ளப் போறோம். குருவுடைய நிழலில் இருக்கும் சிஷ்யர்களின் தேவைகள் அனைத்தையும் குரு கவனித்துக் கொள்கிறார். ஒரு செயல் நடக்க வேண்டுமா அல்லது நடக்கக் கூடாதா அல்லது எவ்வாறு நடைபெற வேண்டும் போன்ற அனைத்துமே குருவின் சங்கல்பம்தான். முதலில், அப்பாவுடைய திருமணத்தை எப்படி குரு முன்கூட்டியே தீர்மானம் செய்து நிகழ்த்தினார் என்பதை அறிந்து கொள்வோம்.

மத்திய பிரதேசத்தில் இருக்கும் பர்கான்பூர் என்கிற ஊரைச் சேர்ந்த செல்வந்தரான ராம்பாவ் பதக் என்கிற வக்கீலுடைய மகள் தாராவுக்கும் அப்பாவுக்கும் 1929 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. மகராஜ் அப்பாவிடம், "நீ பாபுவோட மகளைதான் திருமணம் செய்து கொள்ளப் போகிறாய்? அல்லவா?" என்று கேட்டார். மகராஜ் அப்பாவுடைய மாமனாரான ராம் பாவை பாபு என்று கூறியதோடு மட்டுமல்லாமல் அவர் தனக்கு ஏற்கனவே பரிட்சியம் ஆனவர் என்பதையும் வெளிப்படுத்தினார்.

உடனே ஆச்சரியப்பட்ட அப்பா, "மகராஜ் உங்களுக்கு அவரை ஏற்கனவே தெரியுமா? எப்படி என்று கூறுங்கள்?" என்று கேட்டார். "நீ என்னுடைய புகைப்படத்தை பாபுவின் அம்மாவிடம் காட்டு. அவர்கள் உனக்கு அனைத்து விவரங்களையும் கூறுவார்கள்" என்று கூறினார்.

அப்பா அவருடைய மாமனார் வீட்டுக்கு ஒரு முறை சென்றிருந்த சமயத்தில் மகராஜின் புகைப்படத்தை அந்த வயதான பெண்மணியிடம் காண்பித்தார். "உங்களுக்கு இந்த பாபாவை எப்படித் தெரியும்?" என்று அந்த வயதான பெண்மணி ஆச்சரியத்துடன் கேட்டார்.

வடநாட்டில் துறவிகள்/மகான்களை பாபா என்றுதான் அழைப்பார்கள். அதே மாதிரி அந்த பெண்மணியும் மகராஜை பாபா என்று குறிப்பிட்டார்.

"இந்த பாபா பல வருடங்களுக்கு முன்னர் எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார். அந்த சமயத்தில் என் மகனுக்கு உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது. எப்போது வேண்டுமானாலும் இறந்து விடுவான் என்கிற நிலையில் அவன் இருந்தான். எந்த மருத்துவமும் அவனை குணப்படுத்தவில்லை. வேறு வழி தெரியாமல் கடவுளிடம் மனமுருகி பிரார்த்தனை செய்தேன்.

அந்த சமயத்தில்தான் இவர் தாடியுடன் வயதான ஒரு துறவி போல எங்கள் வீட்டுக்கு வந்தார். "இந்த வீட்டில் யாருக்கோ உடம்பு முடியாமல் இருக்கிறது. அதனால் தான் இங்கே வந்தேன்" என்று அவர் கூறினார். "என் மகன் பாபுவுக்குத் தான் ரொம்ப உடல்நிலை மோசமாக இருக்கிறது" என்று நான் பதட்டமாகக் கூறினேன்.



திருமதி. மாதங்கி பாலாஜி

அவர் உடனே, "கவலைப்படாதே அம்மா. நான் ஏதாவது செய்றேன்" என்று கூறிவிட்டு பாபுவின் நாடியை பார்த்து விட்டு, தன்னுடைய பையிலிருந்து ஒரு பொடியை எடுத்து தண்ணீரில் கலந்து பாபுவுக்குக் கொடுத்தார். தன்னுடைய கையை பாபுவின் உடல் மீது மேலிருந்து கீழ் காட்டிவிட்டு, "நாளையிலிருந்து பாபுவுடைய உடல்நிலை சரியாகும். நீ எதுவும் கவலைப்படாதே" என்று கூறிவிட்டு கிளம்ப ஆயத்தமானார்.

உடனே நான் அவரிடம், "நீங்கள் யார்? எங்கே இருக்கிறீர்கள்?" என்று கேட்டதற்கு, "நான் ஒரே இடத்தில் தங்குவது கிடையாது. என்னுடைய பெயர் மற்றும் என்னுடைய விஷயங்கள் அனைத்தையும் உன் பேத்தியின் கணவர் மூலம் நீ அறிந்து கொள்வாய் என்று கூறிவிட்டு கிளம்பிவிட்டார். இப்போது நீதான் கூற வேண்டும்" என்று அந்த பெண்மணி அனைத்தையும் கூறி முடித்துவிட்டு அப்பாவிடம் கேட்டார். அப்பா அந்த வயதான பெண்மணியிடம் மகராஜுடைய பெயர் மற்றும் தன்னுடைய அனுபவங்கள் அனைத்தையும் விவரமாகக் கூறினார்.

அப்பா மற்றும் அவருடைய மனைவியான தாரா இருவரும் மனம் ஒத்த தம்பதியாக இருந்தார்கள். தாரா செல்வந்தரின் குடும்பத்திலிருந்து வந்திருந்தாலும் அப்பாவுடைய வருமானத்துக்கு தக்க எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார். ஒரு நாள் மகாராஜ் தாராவிடம், "உனக்கு 14 குழந்தைகள் பிறக்கும்" என்று கூறினார். அவர்களுடைய முதல்

இரண்டு குழந்தைகள் பிறந்த உடனேயே இறந்துவிட்டன. அவை இரண்டும் ஆண் குழந்தைகள்.

இரண்டாவது மகன் இறந்த உடனேயே மகராஜ் அப்பாவிடம், "சத்தியநாராயண பூஜை செய்" என்று கூறினார். அவருடைய வீட்டார்கள் அனைவரும் அதற்கு தடை விதித்தனர். "இப்போதுதான் ஒரு துக்க நிகழ்ச்சி நடந்திருக்கிறது. உடனே பூஜை செய்யக்கூடாது" என்றனர். மகராஜுடைய உத்தரவை மீறக்கூடாது என்று எண்ணிய அப்பா, வீட்டார்களின் வார்த்தைகளை துளி கூட பொருட்படுத்தாமல், பூஜைக்கு ஏற்பாடு செய்தார். மகராஜே முன்னின்று அந்த பூஜையை செய்து,பிரசாதத்தை அப்பாவிடம் அளித்தார். "அடுத்த குழந்தை ஆரோக்கியமாக பிறக்கும்" என்கிற உத்தரவாதத்தையும் அளித்து ஆசிர்வதித்தார்.

மகராஜ் கூறியபடியே 1936ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அப்பாவுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு நாராயண் என்று பெயர் சூட்டப்பட்டது. அந்த பெயரை வைத்தால் குழந்தையின் வாழ்க்கை மிகவும் கஷ்டமாக இருக்கும், அதனால் தத்தா என்று பெயர் வைக்கச் சொல்லி மகராஜ் கூறினார். ஆகவே அந்த குழந்தைக்கு நாராயண் தத்தா என்று பெயர் சூட்டப்பட்டது. அக்குழந்தை வளர்ந்து பெரிய விஞ்ஞானியாக ஆனதோடு மட்டுமல்லாமல் தன் தந்தையான அப்பாவுடைய சுயசரிதை புத்தகத்தையும் எழுதினார்.

அப்பா ஆன்மீகத்தில் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தார் என்பதை பின்வரும் நிகழ்ச்சி நமக்கு உணர்த்தும். ஒரு முறை அப்பாவுடைய மகளுக்கு உடல்நிலை மோசமாகி அப்பெண் இறக்கும் தருவாயில் இருந்தார். நாராயன் தத்தா அப்பாவிடம் சென்று, "இந்த பெண்ணை குணப்படுத்துவதற்கு ஏதாவது செய்யக்கூடாதா?" என்று கேட்டார். அடுத்த நாள் காலையிலிருந்து ஏதாவது ஒரு மந்திரத்தை ஜபிக்கலாம் என்று அப்பா முடிவெடுத்து மந்திர ஜபத்தை தொடங்கினார்.

சரியாக ஒரு வாரத்துக்கு மந்திர ஜபம் செய்தார். ஒரு நாள் திடீரென, "மந்திர ஜபத்தை நிறுத்தச் சொல்லி எனக்கு உத்தரவாகி இருக்கிறது. எல்லா ஆத்மாவும் தன் கர்மாவை கழிக்கத்தான் பிறப்பு–இறப்பு என்கிற சுழற்சியில் சிக்கி இருக்கிறது. அந்த குறிப்பிட்ட ஜென்மம் சிறியதாக இருந்தால் அதில் நாம் தலையிடக்கூடாது" என்று கூறிவிட்டார். அவர் கூறியது போலவே அந்த பெண் சிறிது நாட்களில் இறந்துவிட்டார். இது மிகப்பெரிய பக்குவம் அல்லவா? இதுதான் மகராஜ் தன் சிஷ்யரை தயார் செய்திருக்கும் உயர்ந்த நிலை.

நடக்கும் அனைத்து நிகழ்வுகளுக்கும் நாம் வெறும் சாட்சியாக இருந்து கொண்டு, அனைத்தையும் அவ்வாறே ஏற்றுக்கொண்டால் நாம் முக்தி அடைந்ததாக பொருள். அவர்கள்தான் ஜீவன் முக்தர்கள், அதாவது வாழும் போதே

முக்தி நிலை அடைந்தவர்கள். அப்படிப்பட்ட முக்தி நிலைக்கு குருவினால் மட்டுமே கொண்டு செல்ல முடியும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தாரா வசதியான வீட்டு பெண்மணியாக இருப்பினும் அவர் தானேஸ்வரருடைய குறைந்த வருமானத்திற்கு ஏற்றார் போல எளிமையாக வாழ்ந்தார். மகராஜ் அப்பாவுடைய செலவுகளுக்கு ஏற்றார் போல் வருமானம் வரும் என்று கூறியிருந்ததால் அப்பா விடம் எந்தவிதமான வைப்பு நிதியும் இல்லை. இது தாராவுக்கு சிறிது சங்கடமாக இருந்தது. தன் குழந் தைகளுடைய படிப்புக்கு எந்தவித பாதிப்பும் வந்துவிடக்கூடாது என்று அவர் நினைத்தார்.

அப்பா அவரை தேற்றி, "சங்கடம் அடைய வேண்டாம், கண்டிப்பாக படிப்புக்கான பணம் எந்த தடையும் இல்லாமல் கிடைக்கும். மகராஜ் கூறியவற்றை நம்பு" என்று தைரிய வார்த்தைகள் கூறினார். அவர் கூறியது போலவே அவருடைய மகனான தத்தா எம்எஸ்சி படிப்பு படித்து, புனேயில் ஒரு பெரிய விஞ் ஞானியாக ஆனார். இரண்டாவது மகன் சசி எலக்ட்ரானிக் இன்ஜினியர் ஆகி, நல்ல நிலையில் இருந்தார். அவருடைய மகள் லதா சமஸ்கிருதத்தில் மேற்படிப்பு படித்தார்.

தாரா தானேஸ்வருடன் 44 வருடங்கள் திருப்திகரமான வாழ்க்கை வாழ்ந்து 1973 ஆம் ஆண்டு, மகராஜுடைய பாதத்தில் ஐக்கியம் ஆனார்.

ஸ்ரீ சங்கர் மகராஜுக்கு ஜயம் உண்டாகட்டும்!!

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்
இனிய மொழிகள்

01.05.26

படிக்காதவர்கள் உலகத்திற்கு தகுந்த மாதிரி தன்னை மாற்றிக் கொள்கிறார்கள். ஆனால் படித்த வர்கள் தனக்குப்பிடித்த மாதிரி உலகத்தை மாற்ற நினைத்து நிம்மதியை இழக்கிறார்கள்.

02.05.26

சூழ்நிலைகளுக்கேற்ப மாறிக் கொள்பவர்களை நம்பாதீர்கள். ஏனெனில் உங்களுடைய உறுதியான முடிவுகளில் இருந்து நீங்களே மாறி விடுவீர்கள்.

03.05.26

சூழ்நிலை உங்களை பதற்றப் பட வைக்கிறதா, இல்லை உங்களுக்கேற்படும் சூழ்நிலையை நீங்கள் பதற்றப்படாமல் கையாளுகிறீர்களா என்பதை பொறுத்தே உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் இருக்கும்.

04.05.26

சுய அறிவு இல்லாதவனுக்கு மரியாதை கிடைக்கலாம். ஆனால் அது நிலைக்காது. தகுதியும் திறமையும் உள்ளவருக்கு கிடைக்கும் மதிப்பும் மரியாதையும் ஒரு போதும் குறையாது.

05.05.26

எந்த ஒன்றையும் திரும்பத் திரும்ப செய்வது தான் வெற்றிக்கு வழியே தவிர, பாதியில் விட்டு விட்டு ஓடுவது வெற்றிக்கு வழியாகாது.

06.05.26

ஒருவர் மீதுள்ள கோபத்தை மற்றவர்மீது காட்டுவது மனித இயல்பு. அப்படிக் கோபத்தை காட்டியும் யார் நம்முடன் இருக்கி றார்களோ அவர்களே நம்முடைய உண்மையான உறவினர்கள்.

07.05.26

உங்களுக்கு எதிராக சதி நடக் கலாம், உலகம் உங்களை குற்றம் கூறலாம், ஆயினும் எதையும் மாற்ற முயற்சிக்காமல், நடப்பதை வேடிக்கை பார்க்கிறவன் எவனோ அவனே தன்னை அறிகின்றான்.

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

08.05.26

நீங்கள் குருவை பார்ப்பதும், பேசுவதும் அறிவைப் பெறுவதற்காக அல்ல, தவறான பாதையிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள!

09.05.26

உங்கள் வீட்டில் கோடி கோடியாக கொட்டியிருந்தாலும், தங்கமும் நவரத்தினமும் நிறைய இருந்தாலும். எமன் வரும்போது அத்தனையையும் விட்டுவிட்டு உங்களை மட்டும்தான் அழைத்துச் செல்வான்.

10.05.26

உங்கள் வீட்டில் விளக்கு எரிந்து நீங்கள் வெளிச்சத்தில் இருந்தாலும், உங்கள் வீட்டைச்சுற்றி இருட்டு இருந்தால் உங்கள் வீட்டில் விளக்கு எரிந்தும் பயன் ஒன்றும் இல்லை.

11.05.26

புனித யாத்திரை, புனித நீராடுதல், விரத பூஜைகள், தான தருமங்கள், என்று நீ எதை செய்தாலும், இவைகளை செய்ய வேண்டும் என்ற ஆசையை விடாத வரை முக்தி என்பது கிட்டாது.

12.05.26

யோகத்தில் இருந்தாலும், போகத்தில் இருந்தாலும்,கூட்டத்தில் இருந்தாலும், தனியாக இருந்தாலும், எவனது சித்தம் 'நான் யார்' என்பதில் இருக்கிறதோ அவனே குருவை அறிந்த சீடன்.

13.05.26

குரு உங்களது அகங்காரத்தை அழிக்க மாட்டார். அகங்காரம் ஏற்படும் காரணிகளை சுட்டிக் காட்டுவார். நீங்கள்தான் அகங்காரத்தை அழிக்க வேண்டும்.

14.05.26

உங்கள் நிலையை உயர்த்து வதற்காக, அடுத்தவரின் நிலையை தாழ்த்தாதீர்கள் அதுவே அகங் காரத்தின் உச்சம்.

15.05.26

தர்க்கம் செய்ய விரும்புப வர்களிடம் மௌனம் பற்றிப் பேசுவதால் பயன் ஒன்றும் இல்லை.

16.05.26

எதையும் இலவசமாக வாங்க விரும்பாதீர்கள். அது சுயமரியாதைக்கு இழுக்கு. உங்கள் முன்னேற்றத்திற்கு விழும் முட்டுக் கட்டை.

17.05.26

குருவின் முன்னால் இருந்து கொண்டு பிரம்மத்தை நினைக்காமல் குடும்பத்தை நினைப்பவன் முட்டாள்.

18.05.26

உங்கள் குடும்பமும், நண்பர் களும் உங்களை முழுமையாக நேசிக்கின்றார்கள் என்றால் நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்று விட்டீர்கள் என்று அர்த்தம்.

19.05.26

ஆத்மஞானம் அடைந்த ஒருவன் புண்ணிய தீர்த்தங்களில் நீராட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ஆத்மஞானமே புண்ணிய தீர்த்தம்.

20.05.26

சர்க்கரையின் இயல்பு இனிப்பு, பாகற்காயின் இயல்பு கசப்பு, எலும்பிச்சையின் இயல்பு புளிப்பு, அதேபோல் ஆத்மாவின் இயல்பு ஆனந்தம் என்பதை உணர்வதே ஆத்மஞானம்.

21.05.26

குரு எப்போதும் தர்க்கம் செய்ய விரும்புவதில்லை. மெய்ஞானத்தை புரிந்து கொள்ள முடியாத முட்டாள் சீடனால் தர்க்கம் செய்யும் நிலைக்கு தள்ளப்படுகிறார்.

22.05.26

குருபக்தி இல்லாத சீடன் தனது சொந்த அனுபவத்தை "இலக்காகவும்", சோம்பேறித்தனத்தை "சமாதியாகவும்", வெறும் அமைதியை "அடக்கமாகவும்" தவறாகப் புரிந்துகொள்கிறான்.

23.05.26

இங்கு சாத்திரங்களும், சம்பிரதாயங்களும், தத்துவங்களும், சித்தாந்தங்களும் இலவசமாகக் கிடைக்கும். ஆனால் அதனை அறியும் அறிவை நாம் தான் உற்பத்தி செய்தாக வேண்டும்.

24.05.26

மகாவீரரும், புத்தரும் ஒருபோதும் கடவுளை ஏற்றுக்கொண்டதில்லை. ஆனால் அவர்கள் பரமாத்மாவாக ஆகிவிட்டனர். ஏனெனில் அவர் களிடம் இயல்பிலேயே "பணிவு" இருந்தது.

25.05.26

படைப்பிற்கு ஆரம்பமும் இல்லை. முடிவும் இல்லை. அது ஆதியில் இருந்து தொடர்ந்து தன்னு டைய சுழற்சியை நடத்திக்கொண்டே இருக்கிறது. ஆரம்பமும்,முடிவும் முட்டாள் மனிதனின் பிரித்தறிய முடியாத மாயை ஆகும்.

26.05.26

உங்களுக்குள் மறைந்திருக்கும் பரமாத்மாவை பற்றிய அனுபூதியை அடையச்செய்யவே சாத்திரங்கள். எனவே சாத்திரங்கள் ஒரு போதும்



முக்தியளிக்காது. அறிவே முக்தியை அளிக்கக்கூடியது.

27.05.26

ஆதியில் கர்ம யோகத்தையும், ஞான யோகத்தையும் ஆதாரமாகக் கொண்டே பக்தி மார்க்கம் பிறந்தது.

28.05.26

கண்ணாடியில் தெரிவது நீங்களல்ல! உங்களின் பிரதிபலிப்பு. அதுபோலவே இந்த உடல் நீங்கள் அல்ல! பரமாத்மாவின் பிரதிபலிப்பு என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

29.05.26

இந்த பூமியில் யாருக்கும் யாரும் உதவி செய்ய முடியாது. சேவை வேண்டுமானால் செய்யலாம்.

30.05.26

துரோகிகளோடும், அவர்களின் அர்த்தமற்ற அரசியலுடனும் எனக்கு எந்தவித தொடர்பும் இல்லை. எனது குருவும், உண்மையுமே எனது அரசியல். மற்றவை அனைத்தும் சாக்கடை.

31.05.26

இவ்வுலகின் அனைத்து துன்பத்திற்கும் காரணம் நாம் அனைவரும் இன்பத்தை தேடி ஓடுவதே! வாழ்வின் லட்சியம் இன்பமல்ல! ஞானம் என்பதை அறிந்து தேடுங்கள். ●

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய

"மௌனத்தின் மூலம் தவம்"



பிறந்தநாள், திருமணப்பரிசாக
அளிக்கக்கூடிய சிறந்த நூல்

புத்தகம் தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்

விலை: ரூ.100/-
(தபால் செலவு உட்பட)

தொடர்புக்கு: 9941816692.


SAI DHYANALAYA



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.




ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

நமது முன்னோர்களின் வரலாற்றில் மிகவும் மர்மமான மற்றும் ஆச்சரியமான ஒரு பக்கம் என்றால் அது 'சித்தர்கள்' பற்றியதுதான். பலருக்கு அவர்கள் கடவுளின் அவதாரங்களாகத் தெரிகிறார்கள், இன்னும் சிலருக்கு அவர்கள் இயற்கையின் ரகசியங்களைக் கண்டறிந்த ஆதி விஞ்ஞானிகளாகத் தெரிகிறார்கள். உண்மையில் சித்தர்கள் யார்? அவர்களின் நோக்கம்தான் என்ன?



அவர்கள் நிலையில்லா மனித வாழ்வைச் சுட்டிக்காட்டிய மெய் ஞானிகள்.

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப் பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு." என்று பாடிய திருமூலர், மனித வாழ்வின் நிலையாமையை மிகத் துணிச்சலாக உலகுக்கு உணர்த்தியவர். உடல் அழிந்து போகக்கூடியது

சித்தர்கள் யார்

என்பதை உணர்ந்த அதே வேளையில், அந்த உடலையே 'காயகல்பம்' போன்ற கலைகளால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அழியாமல் காக்கும் வழிமுறைகளையும் கண்டறிந்தவர்கள் சித்தர்கள்.

யார் இந்தச் சித்தர்கள்? 'சித்தி' அல்லது 'சக்தி' பெற்றவர்களே சித்தர்கள் எனப்படுகிறார்கள். இவர்கள் வெறும் ஆன்மீகவாதிகள் மட்டுமல்ல, இவர்கள் மருத்துவர்கள், வேதியியலாளர்கள், வானியல் அறிஞர்கள் மற்றும் தத்துவ ஞானிகள். உண்ணாமல், உறங்காமல், காலங்களைக் கடந்த நிலையில் இறை உணர்வோடு ஒன்றி இருப்பதே இவர்களது முதன்மையான நிலை.

காற்றில் பறப்பது, கூடு விட்டு கூடு பாய்தல், உடலைச் சிறுதாக்குதல், பெரிதாக்குதல் போன்ற அட்டமா சித்தகளை இவர்கள் கைவரப் பெற்றிருந்தனர். நவீன அறிவியலுக்கு முன்னோடிகள் அன்று நவீன ஆய்வகங்கள் இல்லா விட்டாலும், காடுகளிலும் குகைகளிலும் இவர்கள் செய்த ஆய்வுகள் இன்றைய நவீன அறிவியலுக்குச் சவால் விடுபவை.

அருகிலுள்ள மூலிகைகளைக் கொண்டே தீர்க்க முடியாத நோய்களைத் தீர்க்கும் முறையைத் தந்தனர். சாதாரண உலோகங்களைத் தங்கமாக மாற்றும் ரசவாத முயற்சியில் ஈடுபட்டனர். இதுவே இன்றைய வேதியியல் துறைக்கு அடித்தளமாக அமைந்தது. பதினெண் சித்தர்களில் ஒருவரான போகர், பழனி மலையில் நவபாஷாண சிலையை வடித்தவர். இவர் ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகளுக்குப் பயணம்

செய்து, அங்குள்ள மக்களிடையே ஆன்மீக மற்றும் தற்காப்புக் கலைகளைப் பரப்பினார்.

இவர் தான் "போதிதர்மர்" என்றழைக்கப்பட்டதாக பல வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. இன்றும் ஜப்பானில் போகரின் அடையாளங்கள் காணப்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சித்தர் மரபு தமிழகத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. நமது இலங்கையிலும் மகத்தான சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். யோகர் சுவாமி, செல்லப்பா சுவாமி, குடை சுவாமி போன்ற ஈழத்துச் சித்தர்கள் மக்களிடையே பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள். அவர்கள் அருளிய ஞானப் பாடல்கள் இன்றும் ஈழத்து மண்ணில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

நாமும் சித்தராக முடியுமா? "கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார்" என்பது பொது மொழி. ஆனால் "கடவுள் உனக்குள்ளேயே இருக்கிறார்; உன் உடலே ஆலயம்" என்பது சித்தர் மொழி. யார் ஒருவர் தனது ஐம்புலன்களை அடக்கி, அகத்தாய்வு செய்து, இயற்கையோடு இயைந்து வாழ்கிறாரோ, அவர் சித்தர் நிலையை அடைய முடியும். இது ஏதோ ஒரு மந்திர வித்தை அல்ல, இது ஒரு வாழ்வியல் கலை.

சித்தர்கள் கடவுளும் அல்ல, வெறும் மந்திரவாதிகளும் அல்ல. அவர்கள் இந்த பிரபஞ்சத்தின் ரகசியங்களை மனித குலத்தின் நன்மைக்காகக் கண்டறிந்த 'மெய்ஞான விஞ்ஞானிகள்'. அவர்களின் வாழ்க்கை முறை நமக்குச் சொல்வது ஒன்றே ஒன்றுதான் "உன்னையே நீ அறிவாய்!" அதுவே இன்றைய "போதி தர்மர்" நமது குருஜி யோகி ஸ்ரீராம் பாபா அவர்களால் நமக்கெல்லாம் பயிற்றுவிக்கும் தன்னையுணர்தல் என்ற ஆத்மஞானமே அது.

சத்சித்ஆனந்தம். குரு வாழ்க! குருவே துணை!

கூடுதல் புகைப்படம்

கோவிந்திரராவ் ஓக் பம்பாயின் அந்தேரியில் வசித்து வந்தார். ஒருமுறை அவரும் அவரது நண்பர் கிருஷ்ணாஞ்சி அகதேவும் ஷிரிடிக்குச் சென்றனர். அவர்கள் பாபாவின் தரிசனம் பெற்று இரண்டு அல்லது மூன்று நாட்கள் அங்கேயே தங்கினர். அவர்கள் புறப்படும் நாளில் இருவரும் பாபாவின் புகைப்படத்தை வாங்கினார்கள்.

அவர்கள் இரண்டு புகைப்படங்களையும் அழகாக இணைத்து கவனமாக பேக் செய்தனர். வீட்டிற்கு செல்லும் வழியில், கோவிந்த்ராவ் தனது சகோதரருக்கு ஒரு புகைப் படம் வாங்காததால் வருத்தப்பட்டார். வீட்டிற்கு



வந்ததும், இரண்டு புகைப்படங்கள் அடங்கிய பாக்கெட்டைத் திறந்தார்கள்.

அவர்களுக்கு மிகவும் ஆச்சரியமாக மூன்று புகைப்படங்கள் இருந்தன, இருப்பினும் அவர்கள் இரண்டுக்கு மட்டுமே பணம் செலுத்தினர். மனதளவில், அவர் இந்த லீலைக்கு பாபாவுக்கு நன்றி தெரிவித்தார், மேலும் தனது சகோதரருக்கு பாபாவின் பிரசாதமாக ஒரு புகைப்படத்தைக் கொடுத்தார்.

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால்
காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: **9941816692**

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

செல்வன்.பி.அர்ஜூன்அதேஷ். குடந்தை. ரூ.3500.

திரு. பாலகிருஷ்ணன்.அண்ணாநகர். ரூ.3000.

திருமதி. ஹேமாவதி நமசிவாயம், சாலிகிராமம்.ரூ.2000

திருமதி. அர்ச்சனா சாய் OMR. ரூ.1008

திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.

திரு. கே. கிருஷ்ணமூர்த்தி, கோவை. ரூ.600

திருமதி. லோகேஸ்வரி கார்த்திக், வாடிப்பட்டி, ரூ.600.
திரு. சந்தானபாபு, சென்னை. ரூ.500.
திரு. சுகன்யா, பெங்களூர். ரூ.500
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு. என்.சண்முகநாதன். சென்னை.ரூ.500.
திருமதி.பி.மகாலட்சுமி பொன்முருகன், மதுரை. ரூ.500.
திரு. வெங்கடாசலம், டி.நகர். ரூ.500.
திரு. வி.சத்தியநாராயணன், குரோம்பேட்டை.ரூ.501.
திரு.எம்.வெங்கடாசலம், அயனாவரம். ரூ.500.
திருமதி. நித்யா ராஜேந்திரன், சென்னை. ரூ.500.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. உமா விஜய்ஆனந், அயனாவரம். ரூ.400.
திரு. சாந்தமூர்த்தி, போரூர். ரூ.300.
திருமதி. உமா மகேஸ்வரி, அயனாவரம். ரூ.250.
திருமதி. திலகம் இதயக்கனி, கதிர், ரூ.200.
செல்வி. அக் ஷயா, பெரவள்ளூர். ரூ.200.
திருமதி. உமாதேவி, அயனாவரம். ரூ.200.
திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க், பெரியார் நகர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.202.
திரு. கோபால்சாய், விருகம்பாக்கம், ரூ.200
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர்.ரூ.200.
திருமதி. பிரியா, அயனாவரம். ரூ.200.
திரு. லோகித் சரண், கோவை. ரூ.100.
திரு.சிவா அரிசி கடை, பெரியார் நகர். ரூ.100.
திருமதி. தமிழரசி, அயனாவரம். ரூ.100.
திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ-1

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும்
அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும்
என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** – **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** – **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** – **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** – **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்

99418 16692, 88258 31068

'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.



எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068